அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 16 இதழ்: 7	குரோதி ஸ்ரீ ஐப்பசி மீ அக்டோபர்—நவம். மீ 1964	வருட சந்தா ரூ. 3-00.

ACC. NO. 9886

Page 313



மெய்க்காட்டு இட்டது.

சித்திர விளக்கம் 31. பக்கம்: 293.

ACC. NO. 9886

பொருள் விளக்கம்

பக்கம்

1. அன்பும் ஆர்வமும் (திருப்புகழ்மணி) ... 289
2. மெய்க்காட்டு இட்டது (கி. வா. ஜகந்நாதன) ... 293
3. சிறுநூற்றிரட்டு விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 298
4. 'சந்த னந்தி மிர்ந்த'—(எண்கண்) திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 301
5. ஆயிரம் பிறைகண்ட திருபபுகழ்மணி ... 311
6. விசாரணை செய்து உண்மை உணருங்கள் M. ராஜகோபாலன் ... 315
7. ஈஷணுத்திரயம் (கி. வா. ஜ.) ... 318
8. அருணகிரிநாத சுவாமிகள் (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 325
9. ஒற்றுமை உயர்வு தரும் (அன்பன்) ... 331
10. Love and Worship (*Thiruppugal Mani*) 335

Grams: MURSOKS. Phone: 51388

தண்டிகை கனப்பவுசு எண்திசை மதிக்கவளர்
சம்ப்ரம விதத்துடனே அருள்வாயே !

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

அமிர்தவசனி
தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ௵ ஐப்பசி மீ அக்டோபர்—நவம்பர் 1964	இதழ் 7

அன்பும் ஆர்வமும்

(திருப்புகழ்மணி)

திரியில்லாமல் விளக்கேற்ற முடியாது. அது போல் மனம் ஒன்று படாமல் ஆண்டவனுடன் கலக்க முடியாது. உலகமெல்லாம் ஆண்டவனுடைய சரீரம். அதற்கு ஆத்மா முருகன். அவனுக்கு விளக்கேற்றுவது எப்படி? இந்த உலகத்தையே ஓர் அகலாக்கித் தான் விளக்கேற்ற வேண்டும்.

"வையமே தகழியாக வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யான்தனக்குச் சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்கவே இன்று"

என்றார் ஆழ்வார்.

கன்மத்தால் பொல்லாக் கவலை யுதிக்குமெனில்,
நன்மனத்தால் எண்ணி நகைசெய்வார் நல்லோரே.

அதாவது பாவனையினால்தான் விளக்கேற்ற வேண்டும். பாவனையினால்தான் உலகத்தையும் ஆண்டவனையும் ஒன்று சேர்க்க முடியும். அன்பே பாவனை. அந்த பாவனையினால்தான் ஆண்டவனுடன் கலக்க வேண்டும். அன்பு என்பது மனத்தி லிருக்கப் பட்ட ஒரு பண்பு. எந்த உயிராயினும் அதனிடம் அன்பா யிருக்கும் பண்பு ஏற்பட்டுவிட வேண்டும். அன்பின் வெளியீடு ஆர்வம். உள்ளத்திலுள்ள அன்பு ஆர்வத்தினால்தான் வெளிப்படுகிறது. அன்பின் பண்பு ஆர்வமே. அன்பும் ஆர்வமும், உடலும் உயிரும் போல் உள்ளன. இரண்டும் ஒன்று சேர்ந் தால்தான் முருகனைப் பாடிக் கூத்தாட முடியும்.

காவடி யெடுத்துத் தன்னை மறந்து ஆடிக் கொண்டு வருகிறார்களே; அவர்கள் யார்? உயிரா, உடலா? இரண்டுமில்லை. முருகன் சொந்தமாய் எடுப்போர்கெல்லாம் குழந்தை யாகையால் முருகனை நினைப்பதினால் மனிதத் தன்மை அடங்கி தெய்வத் தன்மை வெளிப்பட்டு விடுகிறது. அதனால், அங்கு ஆடுவது தெய்வமேதான்.

அன்பினுடைய ஆர்வத்தைப் பலவழியில் பார்க் கலாம். அன்பு என்பது கடல். ஆர்வம் என்பது அலை. அன்பில் ஆர்வம என்னும் அலை விடாமல் வீசிக்கொண் டிருக்கிறது. அன்பும் ஆர்வமும் சேர்ந்தவிடத்தில்தான் ஆண்டவனருள் பெருகுகிறது.

கடவுளருள சோதனைகள் கண்கலங்க வைககுமெனில்,
புடம்போட்டு மாற்றுயர்த்தும் புண்யமிலை ஆகுமிதே.

ஆண்டவனுடைய அருள் அன்பர்களிடம் எப்படி வருகிறதென்பதைப் பாரதியார் கூறியுள்ளார். சலசலத் தெறிந்திடும் அலைகளைப் போலும், திருமகளை நாடியவர் செல்வத்தில் பெருகுவது போலும் கண்ணனுடைய அருளால் திரௌபதியின் புடவை வளர்ந்ததாம். ஆண்டவனுடைய அருள் தொண்டர்களிடம் வரும்பொழுது அலைகளைப்போல் வேகமாய்த் தான் வரும். ஆண்டவன் கொஞ்சமும் பேதமில்லாமல் தன்னை நாடிவரும் ஜீவராசிகளுக்கெல்லாம் அருளை வாரி வாரிக் கொடுத்துக் கொண்டே யிருக்கிறான்.

நேசம் என்பது உள்ளே யுள்ள பண்பு. "ஈசனை னக்கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நீ நினைந்து கொள்" என்றார் ஔவையார். நேசம் என்பது உயிரின் இயல்பான பண்பு.

மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பார்த்து ஈசனுடைய பண்புகளைக் கேட்கையில், 'பூசுவதும் பூண்பதுவும் பேசுவதும் கொண்டு எவ்வுயிர்க்கும் இயல்பா யிருக்கிறான்' என்று கூறினாள். ஆதலால் ஈசன் நம்மிடம் இயல்பா யிருக்கிறான். அதேபோல் எல்லா உயிர்களிடத்திலும் ஈசனிருப்பது இயல்பென்பது நினைவிலிருக்க வேண்டும். ஆண்டவன் என்றும் அழியாதவன் என்பதை ஓம் என்ற சப்தத்தால் உபநிஷத் குறிக்கிறது.

காற்றினால் மேகம் கலைந்துபின்னம் ஆவதுபோல்,
ஊற்றும் ஜெபத்தினால் ஊழ்சிதையும் காணீரே.

ஆண்டவனிடமுள்ள அன்புதான் பஜனை என்று உணர்ச்சியாய் வெளிவருகிறது. பக்தர்கள் தொண்டர்களுடன் கூடிப் பஜனை செய்வதை விட்டு மோக்ஷத்தையும் விரும்பாதவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார் சேக்கிழார்.

"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

என்று பாடியுள்ளார் ஆழ்வார்.

அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே யென்று பாடும் சுவை தவிர மோக்ஷ சுகம் கூட எனக்கு வேண்டாம் என்கிறார்.

மோக்ஷத்தில் கிடைக்கும் பேரின்பமே நாம பஜனையிலும் கிடைக்கிறது. பகவானைப் பற்றிப் புகழ்ந்து பாடுவது அனுபூதியினை லுண்டாகிறது. அனுபூதி ஆர்வத்தினை லுண்டாகிறது. ஆதலால் அன்புடன் ஆண்டவன் நாமங்களைப் பாடுவதே ஆனந்தமடையும் வழி.

மெய்க்காட்டு இட்டது.

[கி. வா. ஜகந்நாதன்.]

அனந்தகுண பாண்டியன் தன்மகன் குலபூஷணனுக்கு முடிசூட்டி வைத்து இறைவன் திருவடியை அடைந்தான். குலபூஷணன் மனுநீதி பிறழாமல் செங்கோலோச்சி வந்தான். அவனிடம் சேனபதியாக இருந்தவன் சௌந்தர சாமந்தன் என்பவன். அவன் சிவனடியார்களைச் சிவபெருமானுகவே எண்ணி வழிபடும் இயல்புள்ளவன். அவன் பாண்டிய மன்னனுக்குத் துணையாக நின்று அவனுடைய படைக்கெல்லாம் தனித் தலைவனுக இருந்து வந்தான்.

அக்காலத்தில் வேடர்களுக்குத் தலைவனுக இருந்த சேதிராயன் என்பவன் பலரைப் படை வீரராகச் சேர்த்துக் கொண்டு பெருமிடுக்கோடு வாழ்ந்தான். "நான் பாண்டிய மன்னனேடு போரிட்டு வெற்றி கொள்ளப் போகிறேன்" என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான். அது பாண்டியனுக்குத் தெரிய வந்தது. ஒருகால், சேதிராயன் படையெடுத்து வந்தால் அவனை எதிர்த்து ஓட்டுவதற்கும் பெரும் படை வேண்டுமென்று கருதிய மன்னன், தன்னிடம் இருந்த படைக் கணக்கைப் பார்த்தான். பலகாலம் போரின்றி இருந்தமையால் படைகளை மிகுதியாக வைத்துக் கொள்ளவில்லை அவன். ஆதலின் பகைவரை எதிர்த்து வெற்றி கொள்ளும் அளவுக்குத் தன்னிடம் படை இல்லை என்பதை அறிந்து, பொருள் கொடுத்தேனும் வேண்டிய படையைத் திரட்ட வேண்டுமென்று தீர்மானித்தான். சேனபதியாகிய சௌந்தர சாமந்தனை அழைத்து, "நம்முடைய நிதியறையைத்

அன்பிணக்கம் ஞானம் அமைந்தவர்தம் வாழ்க்கையினில்,
துன்பிணக்கம் பல்லிளித்துத் தூரத்தே போகுமரோ.

திறந்து வேண்டிய பொருளை எடுத்து அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பி நமக்கு வேண்டிய படைகளைத் திரட்டுவாயாக" என்று பணித்தான்.

சாமந்தன் அரசன் பணித்தபடியே அவனுடைய கருவூலத்தைத் திறந்து தன் மனம் நினைந்த அளவுக்கு பொன்னை எடுத்துக் கொண்டான். அரசன் படைதிரட்டச் சொன்னாலும் சாமந்தனுக்குச் சிவபெருமான் நினைவும் அடியார்கள் நினைவுமே மேலோங்கி நின்றன. நிதியை எடுத்துக் கொண்ட சௌந்தர சாமந்தன் நேரே திருக்கோயிலுக்கு வந்து பொற்றாமரைப் பொய்கையில் நீராடி உள்ளே சென்று இறைவனைப் பணிந்து "எம்பெருமானே, எங்கள் அரசனுடைய விருப்பத்தை நீயே நிறைவேற்ற வேண்டும். இந்த நிதியை உனக்கும் உன் அடியார்களுக்குமே சமர்ப்பிக்கின்றேன்" என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

பிறகு அந்தப் பொருளை அவ்வாறே செலவிடத் தொடங்கினான். ஆலயத்தில் கோபுரம், ஆயிரக்கால் மண்டபம் முதலியவற்றைக் கட்டுவித்தான். இறைவனுக்குக் கவசமும் முத்துக் குடையும் கொடி வரிசையும் பிறவும் வாங்கி யளித்தான். வேள்விகளைப் புரியச் செய்தான். அந்தணர்களுக்கு உபநயனம், திருமணம் முதலியவற்றைப் புரிவித்தான். துறவிகளுக்கு வேண்டியவற்றை வழங்கினான். சிவனடியார்களைப் பூசித்து விருந்து அருந்தச் செய்தான். இன்று ஆயிரம்பொன், மறுநாள் இரண்டாயிரம் பொன், அதற்கு அடுத்த நாள் நாலாயிரம் பொன் என்று ஒரு நாளைக்கு ஒரு நாள் அதிகமாகச் செலவு செய்து சிவப் பணியையும் தவப்பணியையும் சிவனடியார் திருப்பணியையும் இடை விடாமல் செய்து வந்தான்.

எங்கும்பல் வஞ்சனைகள், ஏமாற்றும் சூழ்ச்சிபல
தங்குதலால், நல்லோர் தவிக்கின்றார் காணீரே.

இந்தச் செய்தியைச் சிலர் பாண்டியன் காதில் போட்டார்கள். அதனை அறிந்த சாமந்தன், இறைவன் திருவருளே துணை என்று நம்பி அரசனுடைய சபைக்குச் சென்று அங்கே உத்தியோகம் செய்பவர்களிடம் படைகளுக்காகக் கடிதம் எழுதும்படி செய்தான். பொய்யாகவே அந்த ஓலையை எழுதுவித்தான். தெலுங்கருக்கும், கலிங்கருக்கும், விராடருக்கும், மராடருக்கும், இப்படியே பலநாட்டினருக்கும் "படைகளை அனுப்புக" என்று ஓலைகளை எழுதச் செய்து, அவற்றை அவரவர் நாட்டுக்கு அனுப்புவதைப் போலப் பாவனை செய்தான்.

இப்படி அவன் செய்து ஆறு மாதங்கள் ஆயின. எங்கிருந்தும் படை வரவில்லை. பாண்டியனுக்கு ஐயம் உண்டாயிற்று. உடனே சேனுபதியை அழைத்து, "நாளை மாலைக்குள் எல்லாப் படைகளையும் வருவித்து விடவேண்டும்" என்று கண்டிப்பாகச் சொன்னுன். அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டு வந்தான் சௌந்தர சாமந்தன்.

நேரே இறைவன் திருக்கோயிலை அடைந்து அப்பெருமான் முன் வீழ்ந்து வணங்கி எழுந்தான்; எம்பெருமானே, அரசன் தந்த பொருள்களையெல்லாம் உனக்கும் உன் அடியவருக்குமாகச் செலவு செய்யும்படி என்னைப் பணித்து ஆட்கொண்டாயே! இப்போது அரசன் படை வேண்டும் என்கிருன். நான் எங்கிருந்து எவ்வாறு படையை அழைத்து வருவேன்" என்று சொல்லி நின்றுன். அப்போது வானிலிருந்து ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. "நாளைக்குச் சேனையோடு நாம் வருகிறோம். நீ வழக்கம்போல் அரசவைக்குச் சென்று படை வருகிறதென்று அரசனிடம் சொல்" என்று

மாய வலையில் மனஞ்சிக்கி, மாழ்கிமதி,
தோயும் கவலைகளைத் தோற்றுவித்தல் நன்றேயோ?

அது கூறியது. அதுகேட்ட சாமந்தன் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தான். தன்வீடு சென்றடைந்து, சாமந்தன் இறைவன் திருவருளை எண்ணி வியந்தான். இரவு வந்தது. அவன், மறு நாள் இறைவன் படையுடன் வருவான் என்ற எண்ணத்தோடு தூக்கமின்றி யிருந்தான்.

மறுநாள் பொழுது விடிந்தது. சேனாபதி இறைவன் திருக்கோயில் சென்று சொக்கலிங்கப் பெருமானை வணங்கி விட்டு அரண்மனையை நோக்கிச் சென்றான். அப்போது இறைவன் ஓர் அருளாடலை நிகழ்த்தலானான். சங்கு கன்னன் முதலிய கண நாதர்களைக் காலாட் படைகளாக உருமாறி வரச் செய்தான். நந்தி, மாகாளர் முதலியவர்களைக் குதிரை வீரர்களாக்கினன். யாவரும் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு ஆரவாரத்தோடு புறப்பட்டார்கள். இறைவன் தன்னுடைய இடப்பாகத்தைக் குதிரையாக மாற்றி அதன்மேல் ஏறித் தனியே வந்தான். பல வாத்தியங்கள் முழங்கும் ஒலியும், குதிரைகள் கனைக்கும் ஒலியும், படைவீரர்கள் ஆரவாரம் செய்யும் ஒலியும் சேர்ந்து கடலே பொங்கி வருவது போலத் தோன்ற அந்தப் படை மதுரையை நோக்கி வந்தது.

படை வருவதை யறிந்த சாமந்தன் அரசனை அணுகிச் செய்தியைச் சொன்னான். மன்னன் அரண்மனை வாயில் மண்டபத்துக்கு வந்து அங்கே இட்ட ஆதனத்தில் அமர்ந்து சேனையின் பரப்பைப் பார்தது மகிழ்ந்தான். "இந்தப் படைகள் எநத எந்த நாட்டிலிருந்து வந்திருக்கின்றன?" என்று அவன் கேட்க, சாமந்தன் தன் கையிலுள்ள பொற் பிரம்பை நீட்டி ஒவ்வொரு வரிசையாகக் காட்டத் தொடங்கி னான். அப்படி அடையாளம் காட்டுவதை மெய்க்காட்டு என்று சொல்வார்கள.

கற்பனை யுக்திகளைக் கைவிட்டு, மெய்ம்மைநிலைச் சிற்பரனை யெண்ணிச் சிவமானார் மேலோரே.

"இதோ இவர்கள் கொங்கு நாட்டிலிருந்து வந்த வீரர்கள்; இவர்கள் குரு நாட்டவர்கள்; இவர்கள் கங்கர்கள்; இவர்கள் கருநாடர்கள்; இவர்கள் அங்க நாட்டவர்கள்; இவர் ஆரிய தேசத்தினர்; இவர்கள் வங்க நாட்டு மறவர்; இவர்கள் மாளவர்கள" என்று சாமந்தன் காட்டி வந்தான். அவர்களைப் பார்த்து வியந்த மன்னன், "இவ்வளவு பெரும் படையை எவ்வாறு வரசெய்ய முடிந்தது?" என்று கேட்டான். சேனுபதி, "எல்லாம் தங்களுடைய பொக்கிஷத்திலிருந்து எடுத்த நிதியினுல்தான் சாத்தியமாயிற்று" என்றுன்.

அங்கே கூட்டத்தில் சேராமல் தனியே ஒற்றைச் சேவகனுகக் குதிரையின்மேல் இருந்த இறைவனைப் பார்த்த அரசன், "அவர் யார்?" என்று கேட்டான. சாமந்தன், "இந்தச் சேனை வெள்ளத்தில் அவரை இன்னுரென்று எப்படி அறிவது?" என்றுன். "அவரை இங்கே அழைப்பாயாக" என்று அரசன் பணிக்க, சாமந்தன் அழைத்தான். கவசமணிந்த குதிரை வீரர் கோலத்தி லிருந்த எம்பெருமான் அரசனுக்கு அருகே சென்றுன். மன்னன் மகிழ்ச்சி மிக்குப் பல அணிகலன்களையும் பட்டுப் பீதாம்பரங்களையும் வழங்கினுன. எம்பெருமான் அவற்றை வாங்கித் தான் அணிந்து கொண்டு மற்றப் படைத் தலைவர்களுக்கும் ஈந்தான். பிறகு தன்னுடைய குதிரையைக் கொண்டு பலவகைச் சாரி பாயச் செய்து காட்டிச் சேனை வீரர் கூட்டத்தோடே சேர்ந்து கொண்டான்.

அப்போது ஓர் ஒற்றன் அங்கே ஓடிவந்து அரசனிடம், "சேதிராயன் வேட்டைக்குப் போயிருந்த இடத்தில் புலிக்கு இரையாகி மாய்ந்தான்" என்று சொன்னுன். போர்

நானென்னும் ஆணவம் நாணிப் புறம்போக,
சேனில் உறையிறையைச் சிந்திப்பம் வாரீரே.

செய்யாமலே சேதிராயனுடைய அல்லலினின்றும் நீங்கிய மகிழ்ச்சியில் ஆழ்ந்த அரசன் தன் சேனுபதியாகிய சௌந்தர சாமந்தனுக்குப் பல வரிசைகளை வழங்கி, வந்திருந்த படைகளைத் தம்தம் ஊருக்குப் போகும்படி அனுப்பச் சொன்னுன். சேனுபதியும் அவ்வாறே படை வீரர்களை விடை கொடுத்தனுப்பும் நிலையில் நின்ருன்.

அப்போது திடீரென்று இறைவன் தன்னுடன் வந்த வீரர்களோடு மறைந்தருளினுன். அதைக் கண்ட பாண்டியன் வியப்பு மீதூர நின்ருன். "இது ஆலவாய் இறைவன் செய்த திருவிளையாடல்" என்று உணர்ந்து கண்ணீர் வாரப் புளகம் போர்ப்ப இறைவனை எண்ணி உருகினுன். சாமந்தனைப் பார்த்து, "உமக்கு எம்பெருமான் எளியனுகி வந்த அதிசயத்தைக் கண்டேன். நீர் எனக்கு அந்தப் பெருமானைப் போனறவரே" எனறு சொல்லி வணங்கி, அவனுக்கு வேண்டியன எல்லாம் அளித்துப் போற்றினுன். பகைவனுல் வரும் அச்சம் இன்றி இனிது செங்கோல் ஓச்சிக்கொண்டு வாழ்ந்தான்.

பாம்பனடிகளருளிய

சிறுநூற்றிரட்டு விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. தெ. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

முன்னுரை :

எந்த வேளையும் அடியவர்க்கு அருளுபவன் கந்தவேளே. அப்பரமனைக் கனவிலும் நனவிலும் காணும் பேறு பெற்றுச் சமீப காலத்தில் வாழ்ந்திருந்த தவசியர் தலைவர் பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகளே யாவர். அவர், தாம் ஆறுமுகத்து

அன்புக் கதவை அதிகம் திறந்(து,) உளத்தில்
இன்பச் சிவத்தை இறைஞ்சலாம் வாரீரே.

அண்ணலுக்குச் சூட்டிய பாமாலைகள் 6666. அவர், தமது அருளிச் செயல்களை ஆறு மண்டலங்களாக வகை செய்துள்ளனர்.

முதன் மண்டலம் : குமரகுருதாசர் பாடல்.
இரண்டாம் மண்டலம் : திருவலங்கற்றிரட்டு.
(இரண்டு கண்டங்கள்.)

மூன்றும் மண்டலம் : காசி யாத்திரை, பரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம்.

நான்காம் மண்டலம் : சிறு நூற்றிரட்டு தனிப்பாடல்கள், சேந்தன் செந்தமிழ், பத்துப் பிரபந்தம், குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, குமாரஸ்தவம், செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர் வேள் இறுமாப்பு, சீவயாதனு வியாசம்.

ஐந்தாம் மண்டலம் : திருப்பா.

ஆறும் மண்டலம் : ஸ்ரீமத் குமாரசுவாமியம் என்பன. இவைகளிற் பல நூல்கள் இப்போது கிடைப்பது அருமை. ஆதலின் கிடைக்கின்ற சிலவற்றையேனும் போற்றுவது நலம். அவற்றைப பொருளறிந்து கோடலும் மிக்க நன்மை பயக்கும். தெய்வ அருளே மிக்க அரிய நூல்களுரை வெளியீட்டில் அளவிலாத ஆர்வமும் ஆதரவும் காட்டும் அமிர்தவசனியில் பாம்பனடிகள் வரலாறும், ஸ்ரீகுமாரஸ்தவ விளக்கமும் ஒருவாறு இறைவனருளால் வெளிவந்தன. அது போலவே ' சிறுநூற்றிரட்டு ' உரை விளக்கமும் இனிது வெளி வருகின்றது.

உலகம் உதித்தநலம் ஓர்வ(ம்;)உயிர் நுட்பம்
இலகல் உணர்வம்; இனிதிருப்பம் வாரீரே.

சிறு நூற்றிரட்டு :

மலரில் உள்ள மணமும் தேனும் தேடிக் கூட்டிப் பலருக்கும் உண்ணக் கொடுக்கும் பணியே தன் வாழ்க்கையாக வுடையது வண்டு.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி." அதனைப் போலச் சிவமணமும் சிவானந்தத் தேனும் தேடித் திரட்டி நமது பாம்பனடிகளாகிய வண்டு தந்ததே 'சிறு நூற்றிரட்டு' என்பதாம். நாலு (வேத) சிறகும், ஆறு (சாத்திரமான) கால்களும் கொண்டு முருகின் (முருகவேளின்) இனிய தேனை அருளுபவர் பாம்பன் முனிவரெனக. இத்திரட்டில் சண்முக கவசம் முதல் அட்டாட்ட விக்ரக லீலை வரையிலுள்ள பததுச் சொட்டுகள் உள்ளன. பாக்கியசாலிகளாகிய நாம் அவற்றைச் சுவைக்க பாமாலை யணி புயனுன பன்னிருகைப பரமனைப் போற்றுவோம். ஏனைய நூல்களிருக்கச் சிறு நூற்றிரட்டு விளக்கம் எதற்கு? கூறுதும.

முதலில் நாம் உரை வகுத்தது குமாரஸ்தவம் ஆகும். அது அடிகளார் நூல் வகையில் நான்காம் மண்டலத்திலுளது. ஆதலின அம்மண்டலத்தைச் சேர்ந்த மற்றொரு நூல் தொகையை விளக்கம் செய்வது பொருத்தமாகும். மேலும் அடிகளார் அருள் நூற்களில் பாராயணத்திற்கு எளிமையும், மிக்க பயன் பட்டு வருவனவுமான சண்முக கவசம், பஞ்சாமிர்த வண்ணம் போன்ற நூற்கள் இத்திரட்டில் உள்ளன என்பதாலு மென அறிக.

அடுத்த இதழில் சிறு நூற்றிரட்டின் முதல் நூலான 'சண்முக கவசம்' உரை விளக்கம் பெறும். மேலும் துலா மதியான ஐப்பசிக் கந்த சஷ்டி விரத நாளில் சண்முக கவச விரிவுரை வருவது விரும்பத் தக்கதே யன்றோ!

எனக்கும் இறைவர்க்கும் என்னதொடர்(பு) என்று,
மனக்கண் நினைக்க, மதிதெளியும் பாரீரே.

உ

எண்கண்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

சந்த னந்தி மிர்ந்த ஊனந்து குங்கு மங்க டம்பி லங்கு
    சண்ப கஞ்செ றிந்தி லங்கு திரடோளும்
தண்டை யஞ்சி லம்ப லம்ப வெண்டை யஞ்ச லஞ்ச லென்று
    சஞ்சி தஞ்ச தங்கை கொஞ்ச மயிலேறித்
திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்த னந்த னந்த னென்று
    சென்ற சைந்து கந்து வந்து கிருபையோடே
சிந்தை யங்கு லம்பு குந்து சந்த தம்பு கழ்ந்து ணர்ந்து
    செம்ப தம்ப ணிந்தி ரென்று மொழிவாயே
அந்த மந்தி கொண்டி லங்கை வெந்த ழிந்தி டும்ப கண்டன்
    அங்க முங்கு லைந்த ரங்கொள் பொடியாக
அம்ப கும்ப னுங்க லங்க வெஞ்சி னம்பு சிந்து நின்று
    அம்பு கொண்டு வென்ற கொண்டல் மருகோனே!
இந்து வுங்க ரந்தை தும்பை கொன்றை யுஞ்ச லம்பு ஊனந்தி
    டும்ப ரன்ற னன்பில் வந்த குமரேசா!
இந்தி ரன்ப தம்பெ றண்டர் தம்ப யங்க டிந்த பின்பு
    எண்க ணங்க மர்ந்தி ருந்த பெருமாளே!

(பதவுரை.) (அந்த மந்தி கொண்டு............மருகோனே !)

அந்த மந்தி கொண்டு இலங்கை வெந்து அழிந்து - அந்த ஆஞ்சநேயரைக் கொண்டு, (வீணர்) இலங்கை வெந்து சாம்பராகி;

[*அந்த எனபது, பண்டறி சுட்டு; பன்னெடுங் காலம் இருக்கும் சிரஞ்சீவி என்பது குறிப்பு.*]

காலவெள்ளம் தாவிவந்து கால்சாய்க்கும் கர்ளுமுன்,
சீலங்கொண் டென்றும் சிவத்தைச்சிந் திப்போமே.

இடும்ப கண்டன் அங்கமும் குலைந்து அரம்கொள் பொடி ஆக - முரட்டுத் தனமான (இலங்கைத்) தலைவனை இராவணனுடைய (சீர்கெட்ட) உறுப்புகள் சிதைந்து, அரத்தால் இரும்பு பொடியாவதுபோல் (பலமான அவன் யாக்கை) பஸ்மமாக ; [கண்டன் - அதிபன.]

அம்ப கும்பனும் கலங்க வெம் சினம் புரிந்து நின்று - (ஆறுமாதம்) கண்ணுறங்கும் கும்பகர்ணனும் (அகம்) கலங்குமாறு உக்கிர கோபத்துடன் உருத்து நினறு ;

[அம்பகம் என்பது, ஈறு கெட்டு அம்ப என நின்றது; அம்பகம்- கண். அம்ப கும்பன் - குடம்போல் குவிந்த கண்ணினன். பாதித் தூக்கத்தில் விழித்து, அரைத் தூக்கத்தோடு கொதித்துப் போரில் குதித்த கும்பகருணன் தோற்றத்தை, 'அம்பகும்பன்' என்று அறிவித்தார். மற்று, கும்பகருணன் - குடம்போன்ற செவியுடையவன் ; இது பின்மொழி கெட்ட முனமொழி நிலையல் இப்பொருட்கு, அம்ப - அம்புகளை யுடைய எனப்பொருளாம்.]

அம்பு கொண்டு வென்ற கொண்டல் மருகோனே - (சத்தியத்தின் சர்ரமான) சரங்களின் மூலம் வென்ற கருமுகில் வண்ணனுன காகுத்தன் மருகா !;

[கொண்டல் - நீரைக் கொண்டு வருவது எனும் பொருளில், கருமுகிலை அறிவிக்கும் காரணப் பெயர் ; அது நிறத்தாலும், கைம்மாறு கருதாத கருணையாலும், உருவகமாகி இராமனை உணர்த்தியது.]

(இந்துவும்....................குமரேசா !)

இந்துவும் - பிறைத் திங்களையும் ; கரந்தை—, தும்பை—, கொன்றையும்—, சலம் புனைந்திடும்—கங்கையையும் (சிரத்தில்) அழகாகத் தரித்திருக்கும் ;

பரன்தன் அன்பில் வந்த குமரேசா—சிவனரது (குதூகல) அன்பில் உதயமான குமார தெய்வமே !;

உணர்வு தடிக்காமல், ஒண்மைநலம் எய்தில்,
துணர்போல் ஒளிக்கொழுந்து துள்ளிவிளை யாடுமரோ.

(இந்திரன்..................பெருமாளே !)

இந்திரன் பதம் பெறு அண்டர்தம் பயம் கடிந்த பின்பு - இந்திரன் (இழந்த) பதவியை எய்துமாறு, (அசுரர்களது அழிவின் மூலம்) தேவர்களது அச்சம் அகற்றிய பிறகு ;

எண்கண் அமர்ந்து இருந்த பெருமாளே - எண்கண் (எனப்பெறும்) அப்பதியில், அமைதி விளைய எழுந்தருளிய பெருமையில் உயர்ந்த பெரியோனே !;

(சந்தனம் திமிர்ந்து.................மொழிவாயே !)

சந்தனம் திமிர்ந்து அணிந்து - (புனித) சந்தனத்தை நிரம்பப் பூசி ;

குங்குமம்—, கடம்பு—,

இலங்கு சண்பகம் செறிந்து இலங்கு திரள்தோளும் - (வண்டுகள் மொய்க்காத) பிரகாசமான சண்பக மலர்கள் முதலியவைகள் நிறைந்து விளங்கும் பருத்து உயர்ந்த திருத் தோள்களுடன் ;

தண்டை அம் சிலம்பு அலம்ப - தண்டைகளும், அழகிய சிலம்புகளும் மாறி மாறி ஒலிக்கவும் ;

வெண்டையம் சலன் சலன் என்று - வெண்டையம் எனும் அணிகலன், சலன் சலன் என்று சப்திக்கவும் ;

சஞ்சு இதம் சதங்கை கொஞ்ச - சாயல் இனிமை சார்ந்த சதங்கை யணி, கொஞ்சுவது போலக் குரல் கொடுக்கவும் ;

(தண்டை, சிலம்பு, வெண்டையம், சதங்கை முதலியன, திருவடிகளில் உள்ள தெய்வ அணிகள். சஞ்சு - நிழல். இதம் - இன்பம்.)

மயில் ஏறி - (ஆவரண சக்தியான) மயில்மேல் ஆரோகணித்து ;

திம் - திசை (முழுதும்) ; திம் - (பெருகியுளது) பேரருள் ;

கருமையுறும் ஆணவம், மெய்ப்பொருளைக் காட்டா;
பெருமை மனநிறைவிற் பெம்மானை எய்துவமே.

இந்தி - (அஷ்ட) லட்சுமிகளின் ; மிந்தி - உறவு ; மிந்தி - (இனி) அதிகரிக்கும் ;

தம் தனம் - (பேரின்பம் என்பது,) எமது பெருஞ்செல்வம்;

தனந்தன் என்று சென்று - (யாமே) பிரபு எனும் குறிப்பு வெளிப்படப் புறப்பட்டு ;

அசைந்து உகந்து கிருபையோடே வந்து - அசைந்து ஆடி, ஆநந்தம் புலனுக அருளொடு வந்து ;

சிந்தை அம் குலம் புகுந்து - (புனித) மனக் கோயிலிற் புகுந்து ;

சந்ததம் புகழ்ந்து - (பயனுன சந்தமுள) திருப்புகழைப் பலகாலம் பாராயணம் செய்து ;

உணர்ந்து - தியானித்து ;

செம்பதம் பணிந்து இரு என்று மொழிவாயே - (எமது) திருவடிகளை வழிபட்டு இரு என்று உபதேசித்தருள், (எ - று.)

விரிவுரை.

வாள்பலம், தோள்பலம், வரபலம் மூன்றும், இலங்கைமா நகரில் எங்கும் இருந்தன. அந்த இறுமாப்பால், மதுவில் மயங்கி மாதரில் உயங்கும் மந்த மதிகளாய் அரக்கர் மலிந்தனர். செல்வி ஜானகி, அவர்கள் இட்ட சிறையில் வருந்தி இருந்தனள்.

அவள் இருக்கும் இடத்தை அறிந்து வருகென, ஆஞ்சநேயர்க்கு இராகவன் அறிவித்தான். அதிமேதை. அதிசய வீரர். பலகலை வல்லர். மகிமா எனும் யோக சித்தியால், அணுவினும் நுணுகுவர். மேருவினும் உயர்பவரான அந்தச் சிறிய திருவடி, நீட்டி வாலை முறுக்கி நிமிர்த்து, காலை மடக்கி

சும்மா உலகின் சுமையா யிருக்காமல்,
அம்மா திருப்பணியர் ஆகியென்றும் வாழ்வோமே!

மார்பை ஒடுக்கி, தோளை உயர்த்தி, தனியராய் வானத்தில் தாவினர். இலங்கையில் குதித்தார். பாழ்படும் இலங்கையின் பரிபவம் அறிந்தார்.

தேவியை எங்கும் தேடினர். அக் கற்பின் செல்வியை, இறுதியில் அசோக வனத்தில் கண்டார். அரக்கர் செயல் கண்டு ஆத்திரம் கொண்டார். வனத்தை அழித்தார். கொதித்து எதிர்த்தாரைக் கொன்றார். அரக்கன் இராவணனை அணுகினர். நீதி கூறினர். தெய்வ நியதி ஓதினர். வீணன் இராவணன், பிராட்டியை விடமாட்டேன் என்றான். மேலும், வானரத்தின் வாலில் நெருப்பை வையுங்கள் என்று, உருத்துக் கதித்து உரைத்தான.

இலங்கை அரக்கர்கள், அறிவுக் கண் அவிந்துளர். இருபது விழிகள் இருந்தும், காமத்தால் இராவணன் கண்கள் அவிந்துளன். உறங்கியே கும்பகர்ணன் உவகையடைபவன். இக் கபோதிகள் ஆட்சியில், அகில உலகமும் அலறுகிறது. இவர்கள் அழியத்தான் வேண்டும் என்று அநுமார் எண்ணினர்.

அவர்கள், தம் வாலில் வைத்த தீயைக் கொண்டே இலங்கை முழுவதையும் எரித்தார். அங்கிருந்து மீண்டார். இராகவன திருமுன் வந்தார். விவரம் கூறினர்.

ஏராளமான பலமுடையவர் எதிரிகள். சத்தியமே இராம சரம். எழுந்தது போர். அசத்திய அரக்கர் படைகள் அழிந்தன. கும்பகர்ணன் தொலைந்தான. இராவணன் உடலம், சுக்கு நூறாகி ஒழிந்தது.

'இலங்கை வெந்து இடும்ப கண்டன் அங்கமும் பொடியாக......அம்ப கும்பனும் கலங்க வென்ற கொண்டல்' என்று போற்றித் திருமாலை மேலோர் புகழ்கின்றார். அதுபோல்,

---

அன்னமுடன ஆடைகளில் ஆவலித்து நிறபதுபோல,
உன்னும் பரத்தில் உணர்வுறுதல் உத்தமமே.

அசுரர் வேகத்தை அடக்கிய நீர், அவரது மருகரென அறிந்து மகிழ்கிறது எமது மனம்.

[அம்பன் என்பவன் ஒரு அரக்கன். அவன் மகன் கும்பன். இவன் இராவணனது தோழன்; சித்தர்கள் பலரைச் சிறையில் அடைத்த இவனை, போரில் சுக்ரீவன வாரி யடித்து உயிரை வாங்கினன். அக் கும்பனையும் பொருளாக்கி எண்ண இடம் தருகிறது, 'அம்ப கும்பனும் கலங்க' எனும் பகுதி.]

(1) குத்துக் கரந்தை. (2) கொட்டைக் கரந்தை. (3) விஷ்ணு கரந்தை. (4) சிவ கரந்தை. (5) சுனைக் கரந்தை. (6) சுரைக் கரந்தை, (7) சூரிய கரந்தை என இருப்பவைகளுள், சிவ கரந்தைகளே நறுமணம் கொண்டவை.

"வாந்தி அரோசகத்தை மாற்றும்; பசிகொடுக்கும்;
சாய்ந்தவிந்து வைக்கட்டும் தப்பாதே—ஏந்தழகைத்
தண்டாது சேர்க்கும்; சார்ந்த பரிமளத்தைத்
தண்டாச் சிவகரந்தை தான்"

என்று, தேரையர் இதன் பெருமையைத் தெரிவிக்கிருர். இதை அடுத்து, என்றும் தும்பை எண்ணப் பெறும். "தும்பைக் குடலை எடுக்காமல், துக்க உடலை எடுத்தேனே" என்று, எண்ணி மேலோர் ஏங்குவர்.

"சீறுகின்ற பாம்போடு சில்விடம்கால் சென்னிவலி
ஏறுகலம மாநதம் இருக்குமோ—நாறுமலர்க்
கொம்பனைய மாதே! குளிர்சீத சன்னிவிடும்
தும்பையிலை என்றுருக்கால் சொல்"

[சில்விடம் - சில விஷசுரம். கால் - வாதநோய். சென்னி வலி - தலை நோய். மாந்தம் - அக்னி மாந்தம். குளிர் சீதம் - சிலேத்தும ஜன்னி.]

நெஞ்சம், தியானத்தில் நேர்மை நெகிழ்வடையும்;
கொஞ்சம் இதனைக் குறித்துணர்ந்து கொள்வோமே.

அகத்தியர், இப்படி தும்பையை அறிமுகப் படுத்தினர்.

இதை அடுத்து, கொனறை எண்ணப் பெறுகிறது. இதன் மகரந்தம் ஓஙகார ரூபம். இதழ்கள் ஐந்தும், நமசிவய மந்திரததை நினைவுறுததுகினறன. சரக்கொனறை, சிறு கொன்றை, செஙகொனறை, கருங்கொன்றை, நரிக் கொன்றை, புலிககக கொன்றை, மந்தாரக் கொன்றை, முள் கொன்றை, மயிர்க் கொன்றை, செம்மயிர்க் கொன்றை என இது பத்து வகைபபடும்.

சிவஞரது அடையாளம மலர் இது. சிறுகொன்றையை அரைத்துக் கண்ணிற் கட்டிஞல், கண்ணோய் தீரும். இலை யைத் துவையலாக்கிச சோற்றுடன் உண்டால், மலம் கழியும். இப்படி எலலாம், கரந்தை தும்பை கொன்றைகளை, பயனுணர் சித்தர்கள் பறையறைந்துளர்,

இவைகளுடன், கர்மத்தைக் கழுவும் கங்கையையும், அமுத மதியையும் சிரத்தில் அணிந்துள சிவபிரான், பரன் எனும் திருநாமம் படைத்தவர். (பரன் - உயர்ந்த ஞான உச்சியில் இருப்பவன்.)

ஆன்மாககளபால், ஆர்வம் கொண்ட அவரது அன் பெனும் பண்பில இருந்து உதயமான உம்மை, 'பரன்தன் அன்பில் வந்த குமரேசா!' எனறு பாடி அடியேம பரவுவம்.

[*மரா - மரிப்பவா; கு - இலலை. பிறக்கும் உடல இறப்பது இயற்கை; மனசாட்சி மரணம் அடைவது மரபல்ல; அதை அறி விக்க வந்த அவதாரம் குமரேசன என்பது, அனுபவ ஞானிகளின் அறிவிப்பு.*]

எவரிலும் தேவ சக்தி இருக்கிறது. அசுர அறிவு அதிகரிக்கும் பொழுது, அத் தெய்வ சக்தி முழுதும் தேய்நது விடும். அதன்பின, பொழுது போக்கிப் புறக்கணிக்கும் பொல்லாச் சூழ்நிலை பொங்கிவரும்.

சுயநலங்கொண் டடந்தோ! சுழித்துத்யா ணிப்பாரேல்,
அயலவர்தம் பாவமெலாம், அன்றவலரைச் சாருமரோ.

இப்படித்தான் ஒரு காலத்தில், இமையவர் பலரும் ஏமாந்தனர். அதன் பயனாக, இந்திரன் தன் பதவியை இழந்தான். குமரேசா! நீர் அந்த அழிவு சக்திகளை, ஞான சக்தியால் அடக்கினீர். அதன்பின் அமரர் அச்சம் அகன்றனர். இழந்த செல்வத்தை இந்திரன் எய்தினன்.

இவ்வளவும் நிகழ்ந்த பின, அமைதி எங்கும் அமைய, எண்ணும் யோகிகள் விருப்பப்படி, எண்கண் பகுதியில் ஏக சொரூபமாக இருந்தீர்.

அப பகுதியில் ஒரு சிற்பி, அன்பின் இதயம் ஆனவர். அவர், உமது அரிய திருவுருவை அமைத்தார். இதுபோல் ஒரு மூர்த்தத்தை, அச சிற்பி எங்கும் அமைப்பது கூடாது என்று, அவ்வூரவர் எண்ணினர். அது கருதி, அவரது வலக்கை விரல்களை அறுத்தனர். ஆஹா! இதுதான் உலக இயல்பு என்பதா?

அதை யுணர்ந்து எண் கண்ணரான நீர், உமது அருளாட்சியை எட்டிகுடி யாக்கினீர். அத்தல அதிபர்கள் விண்ணப்பித்தபடி, சிற்பியார், அஙகேயும் ஒரு மூர்த்தம் அமைத்தார். அஙகுள தலைவர்கள், இதுபோல் ஒரு உருவை அவர் எங்கும் அமைக்காதிருக்க எண்ணி, அச்சிற்பியின் இடக்கர விரலைச் சீவினர். அட பாவமே!

அது கண்ட எண்கண்ணர் நீர், எந்தச சிக்கலும் இல்லாதிருக்க, உமது சொரூப ஜோதி விலாசத்தை மற்றொரு தலததில் வளரச செய்தீர். அங்குள்ளார் இறைஞ்சி வேண்ட இணஙகிய சிற்பியார், இரு கைவிரல்கள் இலலாதிருந்தும், அதிசய ரூபமாக, உமக்கு அங்கும் ஒரு திருவுருவம் அமைத்தார்.

இந்த ஊரவரும் இடர் தருவரோ? சிங்கார வேலா! விதிவழி மதி; எவர்மேலும் பிழையில்லை. உலக உறவு

குழநதைகளும் ஞானிகளும் குற்றமிலர் என்று,
பழுத்த உலகம் பறைசாற்று கின்றதுவே.

போதும். சிக்கெனப் பிடித்தேன்; என்றுகொள் இறைவா என்று, தான் அமைத்த திருவுருவின் தாள்மலர் பற்றி, அலறி விம்மி அவர் அழுதார்.

எண் கண்ணரான தேவரீர், சிக்கல் உலகச சிந்தைவைத் தவிர்த்து, அவரைச சிவமாக்கினீர். அந்தச் சிக்கல் பதி யிலும், எட்டி குடியிலும் சிறக்க விளங்கிச் சாந்த ஸ்வரூபமாகி,

'எண்கண் அமர்ந்த பெருமாளே'! எளியேன் எணணத்தை ஏற்றருளும்.

புனித சந்தனத்தைப் பூசி, அதன்மேல் குங்குமக் குழம்பை அப்பி, சிவபோக தத்துவ கடபப மாலையையும், சிவயோக தத்துவ சணபக மாலையையும் சூடிய திருத்தோள்கள் திகழ்ந்து விளங்க, மணிகளை உள்ளிட்ட தண்டையும் சிலம்பு களும் மறுநலை ஒலிகளை மலர்விக்க;

சலஞ சலன எனறு வெண்டையங்களும், சதங் சதங் என்று சதங்கைகளும் சப்திக்கப், புனித நடை நடநது புறப் பட்டு, திந்தி மிந்தி மிந்தி மிந்தி-தந்த னந்த வந்தன் என்னும் தாள ஒலிக்குத் தக்கபடி, பரத நடனம ஆடிவரும் ஏறு மயிலில், ஏறி வா ஐயா! (இது புறக்காட்சி.)

அதன்பின், அடியேனது சித்தக் கோயிலில் சிறக்கப் புகுந்து, இரு ஐயா! (இது அகக்காடசி.)

அகக்கோயிலில இருந்தபடி, எமது திருப்புகழைப் பாடு! உணர்நது பாட, மனம் ஒருமையுறும். அநநிலையில் எம்மையே தியானித்து இரு! என்று, உமது திருவாக்கால் ஒரு வார்த்தை ஓதி அருளையா!

'அவனருளாலே அவனதாள் வணங்க' என்பர் மேலோர். அதன்படி புறக் காட்சியும் அகக் காட்சியும் புனிதமளிக்க, உமது அருளநோக்கில் அருள்வாக்கில் அகபபட்டு, அடியேன் உய்ய அருள்! துரையே உணர அருள் என்று, விம்மி அழுது விண்ணப்பித்தபடி

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

அறியாமைப் பாவத்தில் ஆழ்கின்ற ஆனமாக்கள், அறிந்து தெளிவுபெறும் அந்நாளும் எந்நாளோ?



திருப்புகழ் மணி
பிரம்மஸ்ரீ T. M. கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

ஆயிரம் பிறைகண்ட திருப்புகழ்மணி

"ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?"

என்று தாயுமானவர் அருணகிரிநாத முனிவரைப் பாராட்டி வியப்படைகிறார். திருப்புகழை உலகுக்கு வழங்கிய அப்பெருமானை 'அப்பா!' என்று அன்பு ததும்ப விளிக்கிறார். திருப்புகழ் நடமாடும் உலகத்தின முதல் அப்பா அவர். இபபோதும் திருப்புகழ் பரவிவரும் முருகன அடியார் உலகத்தில் அந்தத் திருப்புகழைப் பரப்புவதே தம் வாழ்க்கை நெறியாகக் கொண்ட ஒரு முனிவர் இருக்கிறார். அவரைப் பக்தர்கள் 'அப்பா!' என்று அருமையாக அழைப்பார்கள். 'திருப்புகழ் அப்பா' என்று அவரைப பற்றிப் பேசிக் கொள்வார்கள். 'திருப்புகழ்மணி அப்பா' எனறும் சொல்வார்கள். அவர் யார்? இன்று ஆயிரம் பிறை கண்ட அந்தணாளராக விளங்கும் திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அறிவிலும் அருளிலும் பழுத்து முதிர்ந்த அப்பாவுக்குச் செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி எண்பது ஆண்டுகள் நிறைவு எய்தி எண்பத்தோராவது ஆண்டு தொடஙகியது. மரபுப்படி சதாபிஷேக விழா நடைபெற்றது. ஆயிரம் பிறை கண்ட பெரியவர்களுக்குச் சதாபிஷேகம் செய்து கண்குளிரக் கண்டு மகிழ்வது இந்த நாட்டினர் சம்பிரதாயம்.

அன்று மயிலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் உள்ள இராஜேசுவரி கல்யாண மண்டபம் பெருவிழாக் கோலத்துடன் விளங்கியது. காலையில் திருப்புகழ்மணிக்கு மறைநெறிப்படி சாந்தியாகியவை செய்து மந்திரத்தாற் பூரித்த நன்னீரால் ஆட்டி நலம் செய்தார்கள். அவருடைய

**மும்மையிலும் உய்யும் முறையுளதா நம்மிலென்று,
நம்மைநாம் சோதித்துக் கொள்ளுதலும் நன்றுமே.**

மைந்தர்களாகிய சிரஞ்சீவிகள் பாலசுப்பிரமணியன், நாகலிங்கம் என்பவர்களும், மருகர் சிரஞ்சீவி பாலசுப்பிரமணியனும் பிற உறவினர்களும், நண்பர்களும் இந்தக் காட்சியைக் கண்டு பெரும் பேறு பெற்றவர்களாக இன்புற்றார்கள். காலையில் அடியார் திருக்கூட்ட பஜனை நடந்தது. பஜனை செய்வதே இந்த வாழ்வின் பயனென்றும், நாம சங்கீர்த்தனத்தால் இந்த உடம்பு இருக்கும்போதே பரமசாந்தியான இன்பத்தை அடையலாம் என்றும் அநுபவத்தால் உணர்ந்து அடிக்கடி சொல்பவர் திருப்புகழ்மணி அவர்கள். ஆதலின் இந்த விழாவில் பஜனை சிறப்பாக அமைந்தது ஆச்சரியம் அன்று.

மாலையில் பாராட்டு விழா நடைபெற்றது. திருப்புகழ் மணி சட்டத்தில் பேரறிவு வாய்ந்த வக்கீல். திருவனந்தபுரத்தில் தலைமை நீதிபதியாக இருந்து பலருடைய மதிப்பையும் பெற்றவர். அவரைப் பாராட்டுவதற்குச் சட்ட உலகில் புகழ் பெற்ற பலர் குழுமினர். சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்தவரும், கலையுலகிற் சிறப்புற்றவருமாகிய ஸ்ரீ ராஜமன்னாரவர்கள் தலைமை தாங்கப் பல வக்கீல்களும், திரு. கிருபானந்தவாரியாரும், ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம் அவர்களும் திருப்புகழ்மணியைப் பாராட்டிப் பேசினார்கள். பெருங்கூட்டம் கூடியிருந்தது. இறுதியில் திருப்புகழ்மணியவர்கள் உணர்ச்சி ததும்பத் தம் நன்றியை வெளிப்படுத்தினார்கள். இந்தச் சொல்விருந்துக்குப் பின் எல்லோருக்கும் அறுசுவை யுண்டியாகிய விருந்தும் கிடைத்தது. திருப்புகழ் அப்பா அவர்களைப்பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பலர் எழுதிய பாராட்டுரைகள் அடங்கிய மலர் ஒன்றை வெளியிட்டு யாவருக்கும் வழங்கினர்.

அந்த மலரின் அட்டை, திருப்புகழ்மணி யவர்களின் வாழ்க்கை லட்சியத்தைக் குறிப்பாகக் காட்டும் அழகிய

உடம்பு விழுமுன்னர் உத்தமரைச் சார்ந்து,
திடஞானம் உள்ளத்தில் சேரச்செய் விப்போமே.

ஓவியத்தோடு திகழ்கிறது. கோபுரம், அதன்முன் இளமுருகன்; கீழே ஒரு பக்கம் ஜாலராவும் சப்ளாக் கட்டையும்; மற்றொரு பக்கம் வக்கீலுக்குரிய தலைப்பாகையும் கழுத்தணியும் உள்ளன. சட்டப் புலமையினால் வக்கீல் தொழிலில் நல்ல வருவாயைப் பெற்றவர் திருப்புகழ்மணி. அந்தத் தொழிலுக்கு அடையாள மாகத் தலைப்பாகையும் கழுத்தணியும் போட்டிருக்கிறார்கள். அவை இடப்பக்கத்தில் உள்ளன. வலப்பக்கத்தில் ஜால்ராவும் சப்ளாக் கட்டையும், தம் வலக்கரத்தால் எப்போதும் ஜாலரா வையும் சப்ளாக் கட்டையையும் தட்டிப் பஜனைசெய்து இன் புறுவர் என்பதை அவை குறிப்பிக்கின்றன.

வக்கீல் தொழிலில் பொருளை ஈட்டினாலும் திருப்புகழ் மணியின் உயிர் நாடியாக இருப்பது பஜனை. இறைவன் திருநாமத்திலும் திருப்புகழிலும் ஈடுபட்டு உருகிப் பிறரையும் உருக்கும் பெரியார் அவர். அவருடைய பஜனையில் இசை இனிதாக இருக்கும் எனபது ஒரு பெருமை அன்று; சொற்கள் முறியாமல் வரும் என்பதும் ஒரு சிறப்பன்று. அந்தப் பஜனை யில் அவருடைய இதயமலரில் கமழும் பக்திமணம் வெளிப் படும். அது கேட்பவர் எல்லோரையும் மயக்கிக் கண்ணீரை வருவிக்கும். இதனால்தான் அவருடைய பஜனையில் பண்டி தரும் பாமரரும் ஈடுபடுகிறார்கள்.

திருத்தணியில் ஒவ்வொரு ஜனவரி முதல்தேதி விடியற் காலையில் திருப்படித திருவிழா நிறைவு பெறுகிறது. ஆயிரக் கணக்கில் அன்பர்கள் கூடுகிறார்கள். அதனை இன்று இவ்வளவு சிறப்பாக நடக்கும்படி செய்தவர் இப் பெரியாரே. எத்தனையோ விழாக்கள் இந்த நாட்டில் நடைபெற்று வருகின் றன. ஆனால் திருப்படித் திருவிழா என்று ஒன்று பழங்கா லத்தில் இல்லை. அதைத் திருத்தணியில் புதிதாகத் தொடங்கி

உத்தமமாம் வாயால் உருவேற்றும் சீர்மையினும்,
சித்தத்தால் நாமஜெபம் செய்தல் சிறந்ததுவே.

வளர்த்தவர் திருப்புகழ்மணி. இந்த விழா திருத்தணியோடு நிற்கவில்லை. திருச்சிராப்பள்ளி, சுவாமிமலை, பெரும்பேறு முதலிய பல இடங்களிற் பரவி யிருக்கிறது. மலையும் படியும் உள்ள இடங்களிலெல்லாம் இவ்விழா நாளடைவில் பரவினால் அது ஆச்சரியம் அன்று.

திருவண்ணாமலையில் சுதந்திர தினத்தன்று அருணகிரியார் விழா மிகச சிறப்பாக நடைபெற வித்திட்டவர் அவர். அவ்விழாவை நடத்தும் சென்னை அடியார் திருக்கூட்ட இறை பணி மன்றத்தை நிறுவியவரும் அவர். சென்ன மல்லீசுவரர் கோயிலில் வாரநதோறும அநுபூதி விரிவுரையாற்றி அனுபூதி மண்டபததையும் அஙகே அருணகிரியார் சநநிதியையும் அமைக்கக் காரணமா யிருந்தவரும் அவரே.

முருகனிடம் ஈடுபடும் திருப்புகழ் மணியவர்கள் சமரச நோக்குடையவர். அவருக்கு எந்த மூர்த்தியும் முருகன்தான். கண்ணனையும் கந்தனையும் ஒருவராக நோக்குபவர்.

"கணேச கோவிந்த சிவோகம் ஷண்முகம்" என்பது அவருடைய சமரச பஜனைக்கு முத்திரையான நாமாவளி.

பேசுவதற்கும் பாடுவதற்கும் யார் கூப்பிட்டாலும் உடனே ஒப்புக கொண்டு செல்லும் சௌலப்யம் உடையவர் அவர். வழக்கில் வாதிட அழைத்தால எளிதில் வரமாட்டார். அது சட்ட உலகத்து டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள். அத் தகைய பெரிய வக்கீல், தலைமை நீதிபதி ஸ்தானம் வகிததவர். ஓர் இளைஞன் வந்து, "எங்கள் வீட்டில் பஜனை நடக்கிறது; நீங்கள் வந்து நடததித் தரவேண்டும்" என்றால், உடனே டைரி யைப் பார்ப்பார். வேறு வேலை இல்லாவிட்டால் உடனே ஒப்புக் கொள்வார். யார் பஜனை செய்தாலும் அவரைப்

காலையில் நாரணனைக் கண்டுவழி பட்டோர்கள்,
மாலையில் ஈசன்றாள் ஏத்துமா(று) எய்துவரே.

பாராட்டுவார். இந்த விரிந்த இதயமுடைய பண்பினால் அவரைப் போற்றுகிறவர்கள் நாளுக்குநாள அதிகமாகிறார்கள்.

திருப்புகழைத் தமிழுலகத்தில் பரப்பிய வள்ளிமலை சுவாமிகளுடைய பழக்கத்தால் திருப்புகழில் ஈடுபட்டார். திருப்புகழ்மணி அவர்கள், திருப்புகழைச் சதா ஒலிக்கும் மணியாக விளங்குகிறார். அவர் திருநாமத்தின் தலை யெழுத்துக்களாகிய டி. எம். என்பவற்றை விரித்துச் சொல்வதாக அமையும்படி அநதப் பட்டததை ஸ்ரீ காமகோடி பீடத்து ஜகத்குரு அவர்கள் அருளினார்கள். அந்த மணியின் குரல் எத்தனையோ பேர் காதில் புகுந்து கருததில புகுநது இன்னும் ஒலித்துக் கொணடே யிருககிறது.

இன்னும் பல்லாண்டு பல்லாண்டு இந்த மணி ஒலிக்கட்டும். திருபபுகழ்மணியின தொண்டு அவா தொண்டு கிழவரானாலும் மாறாமல் விளங்கட்டும். என்றும் இளையபிரான் அவரை இன்னும் பல்லாண்டுகள் கண்டும் கேட்டும் மகிழும் வரத்தை நமக்கு அருள்வானாக.

விசாரணை செய்து உண்மை உணருங்கள்

(M. ராஜகோபாலன்.)

உண்மை எப்பொழுதும் ஒரு எளிமையான விஷயம். இதைப்பற்றி ஒருவிதமான மர்மமுமில்லை. அனுபவமே இதை நிரூபிக்கக் கூடும். மனத்தை தியானத்திலும் ஜபத்திலும் பழக்கப் பழக்க, அது ஞான மார்க்கத்தில் வளர்ச்சி யடைந்து பேரின்பததை யடைய முயலுகிறது.

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற" பரிபூரணானந்த சொரூபமாகிய ஈசன் உலகமெங்கும் வியாபித்

நனவில் வழிபாட்டு நன்மைமனம் கொண்டோர்,
கனவிலந்த வஞ்சனையே காணும்பே றுயின்றே.

திருக்கும் காரணத்தினாலேயே, நாம் இவ்வுலகத்தை அநித்திய மாய்க் கருதவில்லை. மேலும் நாம் மரணத்தை விரும்பாததற்குக் காரணம், "என்றுமழியா" நோக்கமே நம் எல்லோரின் இயற்கை மனப்பான்மை யாகும். தவிர, பிறர் நம்மை வெறுப்பதை நாம் வரவேற்க மாட்டோம். காரணம் பண்பு கலந்த அன்பே ஜீவகோடிகளின் பண்பட்ட வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

மேலும் நாம் அறியாமையை நாடிச் செல்வதில்லை. ஏனென்றால் நம்முடைய உண்மை நிலை எதைப்பற்றியும் ஆராய்வதும், தெரிந்து கொள்வதுமே யாகும். கஷ்டங்களை நாம் எதிர்கொண் டழைக்க மாட்டோம். ஆத்மாவின சுய உண்மை நிலை எப்போதும் சந்தோஷகரமான பேரின்ப நிலை யேயாம்.

நாம் இவ்வுலகின்கண் வந்திருப்பது நம்மைத் தெரிந்து கொள்வதற்கும், பிறரைப் புரிந்து கொள்வதற்கும், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவியா யிருப்பதற்குமே யாகும். நமது உயிர் இந்தப் பூதவுடலை விட்டு நீங்கினும் நாமில்லாம லிருப்பது இல்லை. நமது கருமஙகளுக் கேற்றவாறு, கூடுவிட்டுக் கூடு மாறி, ஆண்டவன அருள் நமக்கேற்பட்டு அவன் திருவடிகளை அடையும்வரை ஜன்ம பந்தங்களால் கட்டுண்ணப் படுகிறோம்.

சுயேச்சை நமது பிறப்புரிமை. அடிமைத் தனமல்ல. நமது மனமும், மற்றுமுள்ள இந்திரியங்களும் நமது ஊழியர் களே யொழிய நமது யஜமானர்களல்ல. உண்மையே நம் எல்லோருக்கும் மகிழ்ச்சி யூட்டுவது. பொய்ம்மை அல்ல. ஒற்றுமையே பலமூட்டும். பிளவு மனப்பான்மை யல்ல. புரிந்து கொண்டு காருண்யம் காட்டுவதே நமது குறிக்கோளா யிருக்க வேண்டுமே யன்றி, வெறுப்பும் அசூயையுமல்ல.

ஊதியம் தேடல், உணவு கொளலுறங்கும்
சாதனைபோல், தெய்வ வழிபாடும் சால்பாமே.

"கடவுள் என்பது" மூட நம்பிக்கையாலும் டாம்பீகச் செலவிற்காக ஏற்பட்ட ஒரு மத அறிகுறியுமல்ல. மனிதனின் இருதய கமலத்தின் ஏற்படும் புனிதத் தன்மைதான் கடவுள். "கடவுள்" எல்லோருக்கும் பொதுவானவர். எல்லோருக்கும் உரியவர். நம் குயுக்தியினால் கடவுளை சிறுமைப் படுத்தவோ, ஏளனம் செய்யவோ முற்படுவது மடமையிலும் மடமையாகும்.

நாம் எந்த மதத்தைச் சார்ந்தவர்களானாலும், சொர்க்கத்தின் வாயிற் காப்பாளர்களாக நம்மை எண்ணிக் கொள்வது மதியீனமாகும். ஏனென்றால் "கடவுள்" தன்னுடைய பிரதிநிதியாக யாரையும் அங்கீகரிக்கவில்லை. பரிபக்குவ மடைந்த புத்தி சாலிகள் கடவுளின் மேன்மையையும் புனிதத் தன்மையையும் பிறருக்கெடுத்துச் சொல்ல முற்படுவார்கள். அடியாரின் பணியே ஆண்டவனின் பணி. நமது அண்டை அயலார்களை நேசிப்பதே கடவுளை நேசிப்பதாகும்.

"கடவுள்" நியாயம் வழங்கிக் கொண்டும், அரசாட்சி நடத்திக் கொண்டும், சிம்மாசனத்தில் வீறுகொண்டிருக்கும் ஓர் ராஜ்யாதிபதியுமல்ல. அவர் நம்முடைய ஹிருதய கமலங்களிலேயே வாசம் செய்கிறார். எவ்வளவுக் கெவ்வளவு நமது ஹிருதயம் மாசற்றிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நாம் ஈசனை அதிகமாகத் தெரிந்து கொள்ளவும், புரிந்துகொள்ளவும் முடியும்.

நம் கர்ம வினைகளுக்கு நாமே கர்த்தா. நம்முடைய விதி நம் கைகளில்தா னிருக்கிறது. நாம் முக்தி யடையவும், விடுதலை யடையவும், நாமே சிரமமெடுத்து, அதற்குண்டான பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? (1) விசாரணை செய்து உண்மை உணர வேண்டும். (2) ஆராய்ந்து பார்த்துப்

நாம ஜெபத்தை நாள்தோறும் கையாண்டு,
காமஜயம், காலஜயம் காண்பாரைக் காண்போமே.

புரிந்து கொள்ள வேண்டும். (3) பழகி அனுபவ மடையவேண்டும். (4) தியானத்தால் ஆண்டவனை அறியவேண்டும். (5) தெய்வ நெறி வாழ்க்கையை மேற்கொண்டால் உண்மை சந்துஷ்டியும், மன சாந்தியும் சித்திக்கும்.

நம்முடைய வாழ்க்கையே யோகிகளின் வாழ்க்கையாக அமைய வேண்டும். கருமத்தைக் கசடறச் செய்வதே யோகமாகும். பயனை விரும்பாமலும், பற்றற்றும் செய்யும் கருமமே யோகமெனபபடும். மனத்தடுமாற்ற மில்லாமல் ஸ்திர புத்தியுட னிருப்பதே யோகமாகும். தியானமே யோகமாகும். கலப்படமற்ற துல்லிய பக்தியே யோகமாகும்.

அநுபூதி விளக்கம்

ஈஷணத்திரயம்

(கி. வா. ஜ.)

மனிதர்களில் துன்பம் இல்லாதவரைப் பார்க்கவே முடியாது. ஒவ்வொருவருக்கும் எவையேனும் துன்பங்கள் இருந்து கொண்டே இருக்கும். ஒருவன், "எனக்கு வேலை கிடைககவில்லை" என்று வருந்துகிறான். வேலை கிடைத்தவனோ "சம்பளம் போதவில்லை" என்று அங்கலாய்க்கிறான். நல்ல வேலையில் இருப்பவன், "குடியிருக்கத் தக்கபடி நல்ல வீடு கிடைக்கவில்லை" என்று குறையுறுகிறான். ஒருவனுக்கு இத்தகைய குறை ஏதும் இல்லை. ஆனால் வீட்டுக்குப் போனால் அவனும் மனைவியும் எதிரும் புதிருமாக நின்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதையன்றி, கொஞ்சி விளையாடக் குழந்தை இல்லை. இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம்.

பணம் இருந்தால் எல்லாவற்றையும் நிரப்பிக் கொள்ளலாம் என்ற எண்ணம் பெரும்பாலான மனிதர்களுக்கு இருக்கி

சாரத் தகுதியற்ற சார்பினரைச் சார்வதனால்,
கோரக் கவலைபல வந்துவந்து கொல்கிறதே.

றது. ஆனல் பணம் இல்லாதவர்களுக்கு உள்ள அல்லல்களை விடப் பணம் உள்ளவர்களுக்கு இருக்கும் அல்லல்கள் அளவிட முடியாதவை. இன்று பொருள் வளம் கொழிக்கும் நாடென்று நாம் எண்ணிப் பாராட்டுகிற அமெரிக்காவில தூக்கமில்லாமல் திண்டாடுகிறவர் பலர். தற்கொலை பண்ணிக் கொள்கிற வர்கள் மிகுதி. காரணம் என்ன? அவர்களுக்கு எல்லாம் இருந்தும் மன அமைதி இல்லை. அதைச் சந்திரமண்டலம் வரைக்கும் போய்த் தேடிப் பார்க்கிருர்கள்; கிடைப்பதில்லை.

இந்தப் பிறவியே துன்பம் நிறைந்தது என்று பெரியவர் கள் சொல்கிருர்கள்.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்"

என்பது மணிமேகலை. பிறப்பே துன்பந்தான். பிறப்பு இல்லாத நிலை ஒன்று உண்டென்றும், அதுவே பேரின்பம் அல்லது முத்தி என்றும் சொல்கிருர்கள்.

"வேண்டுங்கால வேண்டும் பிறவாமை"

என்று திருவள்ளுவர் கூறுகிருர். ஜனனம் அற்ற நிலையை அடைந்தாலன்றி உயிர் என்றும் பொன்ருத இன்பத்தைப் பெற முடியாது. ஒரு பிறவி போனல் மறுபிறவி வருகிறது. அதனல் துன்பம் வருகிறது. அதுபோனல் வேறு ஒருபிறவி வருகிறது. அப்போதும் துன்பம் உண்டாகிறது. இபபடியே மாறி மாறிப் பல பிறவிகளை எடுத்து எடுத்து உயிர் ஊசலாடு கிறது.

ஓர் உயிர் இத்தனை பிறவிகளையே எடுக்கும் என்ற வரை யறையே இல்லை.

"எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்"

என்று திருப்புகழில் பாடுகிருர் அருணகிரியார். அளவில்லா

உலகசுகம் யாவும், ஒழியாக் கவலை;
நிலவும் இதையுணர்ந்து நேர்மைநினை என்மனனே.

மல் வருவதால் பிறவிக்குக் கரைகாண முடியாத கடலை உவமை யாக்குவார்கள்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

என்னும் குறளில் பிறவியைப் பெருங்கடலாக உருவகம் செய்தார் திருவள்ளுவர். அதன் உரையில் பரிமேலழகர், காரண காரியத தொடர்சசியாய்க் கரையின்றி வருதலின, பிறவிப் பெருங்கடல் என்றார்' என்று விளக்கினார்.

இவ்வாறு வரும் பிறப்பின வகை, அதாவது ஜீவராசிகளின பேதம் இத்தனை என்று கணக்கெடுப்பது மிகவும் அரிது. கண்ணுக்குத் தெரியாத புழுககள் முதல் மனிதன ஈருக உள்ள ஜீவர்களின் வகையை ஒருவிதமாகக கணக்குப் பண்ணி எண்பத்து நானகு லட்சம் என்று சொல்லி வருகிறார்கள். வேறு ஒரு வகையில் பிரிவுசெய்து ஏழு என்று ஒரு கணக்குச் சொலலுகிறார்கள். அதை எண்ணியே நூல்களில் அடிக்கடி ஏழுபிறவி, எழுபிறபபு என்று வரும்.

"எழுபிறபபும் தீயவை தீண்டா"

என்பது போலத் திருவள்ளுவர் பல இடங்களில் ஏழுவகை ஜீவராசிகளைக் கூறுவார். தாவரம், ஊர்வன, நீர் வாழ்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்பன அந்த ஏழு பிறப்புக்கள். தாவரம் இருபது லட்சம் வகைகளை உடையன. ஊர்வன பதினொரு லட்சம் பேதம் உடையவை. நீர் வாழ்வன பத்து லட்சம் வேறுபாடுகளை உடையன. பறவைகளும் பத்து லட்சம் வகையானவை. நாற்காற் பிராணிகளும் பத்துலட்சம் பேதஙகளை உடையவை. மனிதர்கள் ஒன்பது லட்சம் பேதம்

விலங்கத தகுமவற்றில் வீணுறவார் மககள்,
விலங்கினும் துன்பெய்தி வீறழிந்து போயினரே.

உடையவர்கள். தேவர்கள் பதினுன்கு லட்சம் வகையினர். எல்லாம் சேர்ந்து 84 லட்சம் யோனி பேதம் என்பார்கள்.

இப்படி உள்ள பலவகைப் பிறப்பும் எடுத்தெடுத்து உயிர் இன்னலை அடைகிறது. பிறப்புக் கெட்டால்தான் இன்பம் உண்டு. இதை எண்ணுகிருர் அருணகிரியார்.

மா ஏழ் சனனம் கெட.

பிறவி கணககிறந்து வருதலின் மா என்ற அடை கொடுத்தார். ஜீவராசிகளின் வகை ஏழு ஆதலின் ஏழ் சனனம் என்ருர். இவை கெடவேண்டும். பிறப்புக் கெடுவதற்கு அதற்கு மூலமாக உள்ளது கெடவேண்டும். பிறப்புக்கு வித்தாக இருப்பது ஆசை அல்லது அவா. அதைப் பற்று என்றும் சொல்லலாம்.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்"

என்றும்,

"அவா என்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்றும் திருக்குறள் கூறுகிறது. அந்த ஆசையை வேறு வேறு வகையாகப பிரித்துச் சொல்வார்கள். மண், பெண், பொன் என்று ஒரு வகையில் சொல்வர். தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை என்பவை அவை. மனைவியிடம் பற்று, மக்களிடம் பற்று, பொருளில் பற்று ஆகிய மூன்றே அவை. இவற்றை ஈஷணத்திரயம் என்று வடமொழியில் சொல்வார்கள். இந்த மூன்றும் உயிருக்கு மீண்டும் மீண்டும் பிறவியை உண்டாக்குவன.

வாழ்க்கையில் ஈடுபடும்போது மனைவி மக்களிடம் அன்பு வைத்துப் பழகுவது தவறு அன்று. நல்ல முறையில் பொருள்

**எவரையும் தாழ்வாக எண்ணுமல், கைகுவித்துச்,
சிவசிவஎன் றெண்ணச் சிந்தைநெகிழ் கின்றதுவே.**

ஈட்டுவதும் தவறு அன்று. ஆனால் மனைவி மக்கள் என்றும் நம்முடன் இருப்பார்கள் என்றும், பொருள் எப்போதும் நம்மிடம் தங்கியிருக்கும் என்றும் எண்ணுவது அறியாமை. அவர்களைப் பிரிய நேர்ந்தால், அல்லது நமக்கே இறப்பு வந்தால் அவர்களை விட்டு நீங்குவதற்காக அல்லலுறுவது பற்றின் விளைவு. ரெயிலில் போகும்போது பலருடன் பழகுகிறோம். நாம் உண்ணும் பண்டங்களைப் பகிர்ந்து அவர்களுக்கும் அளிக்கிறோம். ஒவ்வொருவரும் தம்தம் நிலையையும் விவகாரங்களையும் சொல்லிக் கொண்டு நெருங்கிப் பழகுகிறோம். ஆனால் இரு சாராரில் ஒருவர் தாம் இறங்கும் ஸ்டேஷன் வந்தவுடன் மற்றவரிடம் விடை பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன இறங்குகிறார்.

இத்தகைய நிலையில் உலகில் வாழப் பழக வேண்டும். ஞானியர் எல்லோரிடமும் அன்பு வைத்துப் பழகுவார்கள்; ஆனால் பற்று வைக்க மாட்டார்கள். அவர்களைப் பிரிய நேரிட்டால அதற்காக வருந்த மாட்டார்கள்.

அப்படியே மனைவி மக்களிடம் அன்பு வைத்துப் பழகினாலும் எந்தச் சமயத்தில் அவர்களைவிட்டுப் பிரிய நேர்ந்தாலும் அதுபற்றிக் கவலையுறாமல் இருந்தால், அது தூய அன்பாகும். அல்லாதது பற்று. ஈஷணை என்பதும் அதுதான்.

இந்த ஈஷணை இருக்கும் வரையில் நாம் பிறக்கத்தான் வேண்டும். ஆசை நிறைவேறாமல் இறந்து போகும் உயிருக்கு, 'இது தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு வரட்டும்' என்று இறைவன் மீண்டும் பிறப்பைத் தருகிறான். பிறந்த உயிரோ மறுபடியும் ஆசையை அதிகமாக்கிக் கொண்டு வருகிறது. அதனால் மேலும் பிறப்பு வருகிறது.

கல்கல்லீ என்கின்றார் கற்றவர்கள்; கற்றவழி
நில்நில்லீ என்றியற்கை நித்தமும்போ திக்கிறதே!

ஈஷஞுத் திரவியங்களில் ஈடுபடும் ஆறறிவுடைய மனித னுக்கு மனைவி, மக்கள் நிலையாதவர்கள். பொருள் நிலையாதது. நம் வாழ்க்கையும் நிலையாதது என்பது தெரியும். ஆனால் அது அடிக்கடி மறந்து போகிறது. ஒவ்வொரு நாளும் மக்கள் இறந்து படுவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இன்ன பிரா யத்தில்தான் இறப்பு வரும் என்ற நிச்சயம் இல்லை. எந்தக் கணத்திலும் மனிதன் இறந்து போகலாம். இந்த உண்மையை அறிவு வந்த எல்லா மனிதர்களும் அறிந்திருக்கிறார்கள். ஆனாலும் இந்த உலகத்தில் நிலையாக இருப்பவர்களைப் போலவே ஆசையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

ரெயில் வண்டியில் ஏறினவன் நல்ல மெத்தை போட்ட முதல் வகுப்பில் இருக்கிறான். வேறு சிலரும் அந்த வண்டியில் இருக்கிறார்கள். அவர்களோடு பேசி நட்பாடி பிறகு அதில் சுகமாகத் தூங்குகிறான். வசதியாக இருக்கிறது எனபதனால் அங்கேயே அவன் இருந்துவிடுவானா? இருக்கத்தான் அதிகாரி கள் விடுவார்களா? அவன் எந்த ஊருக்கு டிக்கட் வாங்கி யிருக்கிறானோ, அந்த ஊரில் இறங்க வேண்டும். இறங்கும் போது, "ஐயோ, இந்த அருமையான முதல் வகுப்பை விட்டுப் போகவேண்டி யிருக்கிறதே!" என்று வருந்த மாட்டான்.

அவ்வாறே இவ்வாழ்வில் இந்த உடம்பு உள்ளமட்டும் நேர்மையாகவும், அன்பாகவும் நடந்து எந்தச் சமயத்திலும் இந்த உடம்பையும் இதனோடு சார்ந்த பொருள்களையும் விட்டு விடச் சித்தமாக இருக்க வேண்டும்.

ஆனால் அப்படி நாம் இருப்பதில்லை. நிலையாமையை உணராதவன் பற்றுடன் வாழ்ந்தால் அது வியப்பன்று.

உலகயுக்தி கூட்டி உருடி யடிக்காமல்,
துலைபோல் அனுபவந்தான் தூய விரிவுரையே.

'நேற்று இருந்தவன் இன்று இல்லை' என்ற உலக நியதியை நன்கு உணர்ந்தவன் அப்படி யிருப்பதுதான் ஆச்சரியம். அதற்குக் காரணம் என்ன? அதுதான் ஒரு மயக்கம்; மருள். அதையே மாயை என்பர். நீராடும்போது விலகும் பாசி உடனே கூடிக்கொள்வது போல இந்த மாயை மனிதனுடைய அறிவை மூடிக் கொள்கிறது. இந்த மாயையினால் மூன்று ஈஷணைகளும் வளர்கின்றன. மாயையோடு தொடர்புடையவை, மாயையை விடாதவை மூவேடணைகள். அவை மூன்றும் ஒழிந்தால் மாயை ஒழியும். அப்போது பிறப்பு ஒழியும்.

இவற்றை யெல்லாம் எண்ணி முருகனிடம் விண்ணப் பித்துக் கொள்கிறார் அருணகிரிநாதர்.

மாஏழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணைஎன் றுமுடிந் திடுமோ?

'மிகப் பெரிய அளவில் தொடர்ந்து கடல்போல வரும் ஏழு வகையான பிறவிகள் கெடும்படியாக, மாயையோடு விடாமல தொடர்பு பெற்றிருக்கின்ற மூன்று ஈஷணைகள் என்று அழிந்து போகுமோ?' என்று இரங்குகிறார். கடலை மாகடல் என்று அளவு தெரியாதது பற்றிச் சொல்வதுபோலப் பிறப்பையும் மாஏழ் சனனம் என்றார். அளவறியாமல் பிறப் புகளுக் கடல் உவமையாவதோடு எண்ணிக்கையிலும் ஒப்புமை இருக்கிறது. கடல்கள் ஏழு; சனனங்களும் ஏழு. மாஏழ் கடலைப்போல உள்ளவை மாவேழ் சனனம். அது கெடவேண்டு மானால் மாயை கெடவேண்டும். அது கெடவேண்டுமானால் மூன்று ஈஷணைகள் கெடவேண்டும். எதுகை நயம் நோக்கி மூவீடணை என்று வரவேண்டியது மூவேடணை என்று வந்தது.

தினையளவா யினும்தூய தெய்வநினை வெய்தின், நினைவு நிறைவேறும், நிச்சயமாம்; ஓர்சே.

அருணகிரிநாத சுவாமிகள்

[சீர்காழியினின்றும் திருவிடைக்கழிவரை]

(தலங்கள் 22—31)

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

பின்னர், காவிரிப்பூம் பட்டினம் முதலிய தலங்களைத் தரிசித்துக், கரியவன்நகர் (22) என்னும் தலத்தை அடைந்தார். பிரமனைச சிறையிட்ட பெருமானைத் தரிசித்து, மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து வினறு 'அளிசுழல்' எனத் தொடங்கும் திருபபுகழைப் (782) பாடினார். அதில் தாம் பாடிய தமிழ்ப் பாடலைக் கேட்ட பெருமானது திருவருளை வியந்துள்ளார்.

வயலூருக்கு (செய்ப்பதி) வரவென பெருமான் கட்டளை யிட்டது.

அங்கிருந்து திருமண்ணிப்படிக்கரை (23) என்னும் தலத்தை அடைந்தார். தம்மை ஆட்கொண்ட பெருமானைத் தரிசித்தார். அன்றிரவு கனவில் பெருமான் தோன்றி 'நம் செய்ப்பதி வருதி' எனக் கூறி மறைந்தனர். விழித்தெழுந்த நாயனார், முருகவேளின் அருட்டிறத்தை வியந்து,

*" புயற்பொழில் வயற்பதி நலப்படு ப்ரியத்தோடு
புலப்பட எனக்கருள் பெருமாளே—(271)

செய்ப்பதித் தலத்தினைத் துதிதனைத்
திருப்புகழ் பகர்வேனே
திருப்படிக் கரைப் பெருமாளே—(791)

என்றெல்லாம் பாடி வழி நடந்தனர்.

[*இது திருத்தணித் திருப்புகழ். "இருப்பவல் திருப்புகழ்" என்னும் பாட்டின் ஈற்றடியின் பாடபேதம்.]

கடவுள் புனித கருணை விளங்கத்,
திடமும் தெளிவுமுறு செம்மைமனம் வேண்டும்மே.

பின்னர், அங்கிருந்து புள்ளிருக்கு வேளூருக்கு (24) (வைத்தீஸ்வரன் கோயிலுக்கு) வந்து தையல் நாயகி யம்மையின் பாகத்திலுள்ள வைத்தியநாதப் பெருமான் தம் திருப்பவள வாயால் முத்தமிட்டு இனிது கொஞ்சும் முத்துக் குமரவேளின் திருவடியில் வீழ்ந்து இறைஞ்சி கைகூப்பித் தொழுது ஆறு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினர். வைத்தியநாதப் பெருமாளே என முருகவேளையே துதித்து (783), தையல நாயகித் தாயின் பாகராம் நாதர் பிரியப்பட முத்தந் தந்தருள் பெருமாளே என்று "முத்துக்குமாரர்" எனப்பெயர் வந்ததின் காரணத்தை விளக்கி (785), அத்தலத்துச் சிவபிரான் "தீரா நோய் தீர்த்தருள வல்லான்" என்பதை 'வினைதீர்த்த சங்கரர்' என்னுந் திருநாமத்தால விளக்கி, (787) சம்பாதி, சடாயு எனப பெயரிய பறவைகள் (புட்கள்) பூசித்ததலம் 'புள்ளிருக்கு வேளூர்' (788) என்பதையும் புலப்படுத்தி யுள்ளார்.

பின்னும் வள்ளியம்மைக்கு முருகவேள் இதம் கூறி அணி கலம் நிததம் புனைதலே, "சித்ரவளி நாயகிக்கு இதம்பாடி நித்தம் அணி புனைவோனே—(785) எனக் குறித்தும், திருமால் இடபமாய் சிவபெருமானை தாங்கினதை, "அளவு கோடி மாதரைப் புணர்நத காளை ஏறு கர்த்தன்" (786) என்பதால் விளக்கியும், வள்ளிநாயகி அமுத மாதாம் தேவசேனைக்குத் தோழி என்பதைக், "குறமாது அமுத மாதுவின் நல்தோழி வள்ளி நாயகி" (788) என்றும் விளக்கி யுள்ளார்.

வைத்தீஸ்வரன் கோயில் என்னும் தலத்திலிருந்து சிவபிரான் காமனை எரித்த திருக்குறுக்கை (25) என்னும் தலத்தை யடைந்து முருகவேளை வணங்கி, அன்னியூர் (26) முதலான பல தலங்களைத் தொழுது, மாயூரத்தை (27) யடைந் தார். அங்குக் குமரவேளின சந்நிதியில் விழுந்தெழுந்து

கடவுள் திருவுளத்தைக் காண்கின்றோர் மேலோர்;
அடியும் நுனியும்நாம் ஏதும் அறிந்திலமே.

"அமுதினை மெத்தச் சொரிந்து" (792) என்னும் திருப்புகழைப் பாடினார்.

அப்பாடலில் கற்பிற் சிறந்த சீதைக்குத் துக்கம் விளைவித்த ராவணனை ஸ்ரீராமர் சங்கரித்த சேதியை, "மறுவறு கற்பிற் சிறந்த சீதையை விதனம் விளைக்கக் குரங்கினால் அவன் வம்ச மறுத்திட்டு இலங்கும் மாயவன்" என விளக்கியும்,

இறைவன் "பாடென அருள அதற்குப் புகழ்ந்து பாடிய இயல்கவி மெச்சிட் டுயர்ந்த பேறருள் முருகோனே"— என முருகன் திருவருளை வியந்தும் பாராட்டி யுள்ளார்.

பின்னர்த், தான்தோன்றி யப்பர் என்னும் திருநாமமுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் திருஆக்கூர் (28) எனனும் தலத்தை யடைந்து, "சூழ்ந்தேன்ற" எனத் தொடங்கும் திருபபுகழைப் (804) பாடினர். அங்கிருந்து திருக்கடவூரை அடைந்து (29) ஏட்டின் விதிப்படி (789), "சூலம் என" (790) எனத் தொடங்கும் இரண்டு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினார்.

"ஏட்டின் விதிப்படி" என்னும் பாடலில் பாண்டவர் அஞ்ஞாத வாசம் செய்த பாரத நிகழ்ச்சியைக் குறித்தும், அத்தலம் கூற்றுவனை உதைத்துச் சங்காரம் செய்த தலம் என்பதையும், காலனை உதைத்தது தேவியின் சீர்பாதமே என்பதையும் "கூற்று மரித்திடவே உதை பார்வதி" எனக் கூறி விளக்கியும் உள்ளார். பின்னும் அப்பாடலில் வள்ளிநாயகி பார்வதி தேவிக்கும் உகந்தவள் என்பதை, "பார்வதியார்க்கும் இனித்த பெண்ணாகிய மான்மகள்" என்பதையும் விளக்கியுள்ளார்.

"சூலம் எனத் தொடங்கும்" திருப்புகழில் வள்ளியை "ஓம்" என்கிற உபதேச வித்துடன் இறைவன் அணைத்தனன்

மண்ணிற்குள் வேர்தான் மறைந்திருக்கும் ; அன்னதுபோல்
எண்ணும் இதயத்துள் எந்தையுளன் காணீரே.

எனக் கூறியுள்ளது கவனிக்கற் பாலது. சிவனூர்க்குரிய இவ் வுபதேசவித்து (ஓம்) என்னும் பிரணவத்தின் பொருள் என்பது சிவனூர்க்குத் திருவேரகத்தில் முருகவேளால் அருளப் பட்டது.

" சிவனூர் தமக்குரிய வுபதேச வித்தையருள்
திருவேரகத்தில் வரு பெருமாளே " எனவரும் திருப்புகழால் (224) அறியக கிடககின்றது. பின்னும் இப் பாடலால் (790) தேவி காலனையும் அவன் ஏறி வந்த எருமை யையும் உதைத்து வீழ்த்தினள் என்பதும் தெரிய வருகிறது.

திருக்கடவூரினின்றும் முருகவேளிடம் விடைபெற்று பாகை (30) என்னும் தலததுக்கு வந்து, " ஆடல் மாமத ராஜன் " (793), " ஈளை சுரம் " (794), " குவளை பொருது " (795) எனத் தொடங்கும் மூன்று திருப்புகழ்ப் பாக்கள் பாடினர்,

அப்பாடல்களில் பாண்டியனுடைய கூனை நிமிர்த்தின வேதப்பாடலை பெருமான் பாடினதைக், " கூடலான் முது கூனன் ரேட வாதுயர் வேதங் கூறு நாவல மேவுந் தமிழ்வீரா " (793) என வியந்து ஓதியும், பாகை என்னும் தலம் கடற் கரைத்தலம் என்பதை, " கடல்கழி பாயும் பாகை வளம்பதி " 794) என விளக்கி யுள்ளார்.

பின்னர் அங்கிருந்து ' திருக்குராமர நீழலில் முருக பிரான் அமர்ந்துள்ளதும், சேந்தனுருடைய " திருவிசைப்பாப் பதிகத்தைப் பெற்றுள்ளதுமான *' திருவிடைக்கழி ' (31)

[* இத்தலம் திருக்கடவூரிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ள அருமையான தலம். மஹா வித்வான் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை பாடிய பிள்ளைத் தமிழைக் கொண்டது.

பாவமாம் சேற்றின அழுந்திப பழுதடைந்து,
சாவை அணுகுமுன், சங்கரன்தாள் சாரீரே.

என்னும் தலத்தை யடைந்தார். அங்கு ஆண்டவனை வணங்கித் திருக்குரா நிழலில் அமரும் பெருமாளே! உன் திருவடியை நாடி உருகி எனது உள்ளத்தே அமுதூற உனது திருப்புகழை நான் ஓதும்படியான பாக்கியத்தை அருள வேண்டும்.

"உனகம லப்பத நாடி யுருகி யுளத்தமுதூற, உனது திருப்புகழோத அருள்வாயே' (800) எனப் பிரார்த்தித்தனர். முத்திதரும் தலம் திருவிடைக்கழி என்பதை, "முத்தியைத் தரு திருவிடைக்கழி" (799) என உலகோாககு உணர்த்தினர். இத்தலத்தில் முருகபிரான திருக்குராமர நிழலில் அமர்ந்துள்ள திருக்கோலத்தை அப்படியே தமது உள்ளக கிழியில் உரு வெழுதித் திருததணிகை முருகனைப் பின்னர்த் தரிசித்த காலையில், "கொந்துவார் குரவடியினும் (289)...மருவிய... தணிகையில் இணையிலி" எனவும், சுவாமி மலையைத் தரிசித்த போதும், "குராவின் நிழல் மேவும் குமாரனென * நாளும் குலாவியினி தோது அன்பினர் வாழ்வே" (201) எனவும் போற்றியுளார். திருவிடைக்கழி ஆண்டவர் திருத்தணிகை யாண்டவர் போலவே தொடையின் மிசை இடது திருக்கையை வைத்துள்ளார். ஆதலால் தணிகைப் பிரானை நினைக்கும் பொழுதெல்லாம் இடைக்கழி யெகதையின் ஞாபகமும், இடைக்கழியை நினைக்கத் தணிகை ஞாபகமும் அருணகிரி யாருக்கு அவசியம் வரும்: உதாரணமாக—

"கொந்துவார் குரவடியினும்...மருவிய தணிகையில் இணையிலி திருப். (189).

"இடைக்கழியில் .....அழகிய செருத்தணியில்
—வேடிச்சி காவலன் வகுப்பு.

"இடைக்கழியில் ஒரு செருத்தணியில் இனிதிருக்கும் அறுமுகன்"—பொருகளத்தலகை வகுப்பு

*பழநிமலையிலும் குராவடிக் குமரர் சந்நிதி ஒன்றுளது.

சங்கரியை ஏததுனர்க்குச் சங்கடங்கள் தீர்ந்துவிடும்;
பொங்கிவரும் இன்பம்; பொலிவுபெறும் நம்முன்மே.

"ஏரகம் இடைக்கழி...ஏரணி செருத்தணியில்
—வேளைக்காரன் வகுப்பு.

" இடைக்கழியும்...செருத்தணியென வெற்பும்
—பூதவேதாள வகுப்பு.

" திருத்தணி...கோடை அதிப...இடைக்கழி மேவு
பெருமாளே—திருப். (800)

அருணகிரியார்க்கு விசேட வித்தைகளை முருகவேள் அநுக்கிரகித்த தலங்களுள் திருவிடைக்கழியும் ஒன்றென்பது—

" அருணையில் இடைக்கழியில் உரக கிரியிற் புவியில்
அழகிய செருத்தணியில் வாழ்கற்ப காடவியில்
அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியென இமைபபொழுதில் வாழ்வித்த வேதியனும்"
—வேடிச்சி காவலனே"

என்னும் திருவகுப்பால் தெரிகின்றது.

"குரா நிழற் குமரனைக் கும்பிட்டு உள்ளம் குழைந்து கண்ணீர் உகப்பரவி வீழ்ந்தெழுந்து ஆனந்த நிலையில் எட்டு திருப்புகழ்ப் பாடல்களை [796 to 803) திருவாய் மலர்ந்தருளினார். அப்பாடலகளில் வள்ளியம்மை முத்துக்களை யானையின் மருப்பு உலக்கையால் தினை குத்துவதைபபோல் குத்தி விளை விளையாடினள் என்பதையும் (797), முருகவேள் குராமர நிழலில் அமர்ந்துள்ளார் என்றும் (799) கூறியுள்ளார்.

"பழியுறு" எனத் தொடங்கும் திருப்புகழின் ஈற்றடியாகிய

" அருணை திருத்தணி நாக
மலை பழநிபபதி கோடை
அதிப இடைக்கழி மேவு பெருமாளே"
—(திருப்புகழ் 800)

கங்கைநதி ஒன்று, துறையோ கணக்கிலவாம்;
எங்கள் இறையொருவன், எண்ணுமதம் எண்ணிலவே.

என ஆறு தலங்கள் கூறியுள்ளார். இந்த அடியில் நாகமலை கோடை என வருவதால் நாகமலை (திருச்செங்கோடு) வேறு, கோடை என்பது வேறு என் நன்கு விளங்குகின்றது. கோடை என்னும் தலம் வல்லக் கோட்டை என வழங்கும் தலம். இத்தலம் சிங்கபெருமாள் கோயில் ரயில் நிலையத்தி லிருந்து வடமேற்கில் பத்து மைல் தூரத்தில் உள்ளது.

இங்கு சுவாமி பெயர் "கோடையாண்டவர்." பெரிய உருவம். இரண்டு தேவிமார்களுடன் வீற்றிருக்கிறர். சிறிய கோயில். தரிசிக்கத் தக்க தலம்.

"மூலை குலுக்கிகள்" எனத் தொடங்கும் திருப்புகழில் (803) முருகவேள் மூவர்க்கும் உபதேசித்தனர் என்பதை,

"அரனரி பிரமர்கள் முதல் வழிபடப் பிரியமும் வர அவரவர்க்கொரு பொருள்புகல......பெரியோனே" என்னும் அடியிற் காணலாம்.

சமரசம் 26

ஒற்றுமை உயர்வு தரும்

(அன்பன்.)

வாழ்க்கையில், மக்கள் பலவகையாக வளர்ந்துளர். அவரவருடைய வாசனைப்படியே, யோசனைகளும் வளர்ந்திருக்கின்றன. புலன் வழியே போகாதார் புனிதர். மக்களிடம் பல பல மகிமைகள் மறைந்திருக்கின்றன. அதை அறிவது தான் அறம்.

உள்கும் தன்மையின் முழுமை, உண்மை யென்று பெயர் பெறும். விண்ணூதி பூதமாய்ப் பரமன் விளங்குகின்ருன். நிறை மனத்தால் நினைபவர் நெஞ்சுள், அந்த

புறப்பொருளைத் தீயெரிக்கும் போக்குப்போல், ஞானத் திறக்கனலை உள்ளழுக்கைத் தீய்த்துவிடும் காணீரே.

நிமலன் விளங்கி நிற்கின்றான். மக்கள் வழிபடும் எந்த உருவிலும், வித்தக அவன் அருள்மணம் வீசுகின்றது.

அவைகளில் பேதம் காண்பவர், ஏதம் அடைவர். வெப்ப தட்பங்கள், எதனிலும் விரவியுள ; புறத்தில் வெப்பர் அகத்தில் தட்பர் சிவபெருமான். அகத்தில் வெப்பர் புறத்தில் தட்பர் ஆதிமாதவர். உரிய இவைகளை யோகிகள் உணர்வர்; அரிய அவைகளை, தம் நூற்களில் அறிவித்தும் உளர் அந்த அறிஞர்கள்.

இந்த ஒருமையை உணர்பவர், உயர்வு பெறுவர் ; பன்மை எண்ணம் பண்பைக் கெடுக்கும். அநாதி காலமாகவே சிவ விஷ்ணு வழிபாடு சிறந்த தேசம் இது. உள்ளதை இனி ஒரு சிறிது உணர்வம்,

(1) அமுதம் திரண்ட பாற்கடலுள், ஆல காலமும் பிறந்தது. அதனால் கனன்று உலகம் கலங்கியது. உருத்த விடத்தை எடுத்து உண்டு, நீலகண்டர் ஆயினர் நின்மலர். புனிதத் தாயுருவம் கொண்டாள் பூதகி. குயங்களில் அமுதம் கொழித்தது. அதனுடன் குமுறி விடமும் கொப்புளித்தது. காள விடத்தைக் கண்ணன பருகினன. உய்நதது இந்த உலகம்.

(2) இறுமாந்து நின்றான் இராவணன் ; கால் கட்டை விரலால் அழுத்தி, அவன் கர்வம் அடக்கினர் சிவபெருமான்; பின்னொரு காலத்தில், சேயிழையர் கற்பைச் சிதைக்க நினைத்தான் ; அவன் தலைகள் பத்தையும் தள்ளினன் இராகவன்.

(3) ஒரு காலத்தில், கடலில் அமைதி கலந்திருந்தது ; மென்மை ஆலிலை, அதன்மேல் மிதந்தது ; ஆலிலைமேல் ஒரு பாலகனாய் ஆநந்தம் எய்தினர் நாரணர். மற்றொரு

சேரம்பேறி ராட்டினம்போல், சுற்றிச் சுழன்றுவரும்
விம்பேறி யாம்பிறவி வேதனைகள் எண்ணிலவே.

காலத்தில், கர்வம் கொண்டான் கடலரசன்; பிரமாஸ்திரம் எடுத்துப் பிரயோகம் செய்ய இராகவன் எண்ண, அலறி வந்து அடைக்கலம் என்றான். நெடும் சேது பந்தனம், அதன்பின் நிகழ்ந்தது. பிறகு ஒருசமயம், அவன் அள விலாச் செருக்கை யடைந்தான். திரிபுர சம்மார காலத்தில் சிவபிரான், அவன் இடத்தைச சேரும் உலருமாறு சினந்தார்.

(4) பரந்தாமன், ஆதிசேடன்மேல் பள்ளிகொண்டான்; அளவிறந்த திருப்பணியால் அநந்தன் எனும் பெயர் பெற்ற அந்த ஆதிசேடன், கண்ணுதல் பரமன் கரத்தில் கங்கணம் ஆயினன்.

(5) திரிபுரத்தின் தீமை கண்டு, அவைகளைச் சிரித்து எரித்தார் சிவபெருமான்; இரக்கம் அற்ற இலங்கையை, அனுமான் மூலம் எரித்தான் இராகவன்.

(6) எளிய இடையர் குடியில், இன்பம் கொண்டார் கண்ணபிரான்; அகதிகளான முனிவர்கள் குகைகளில், ஆநந்தித்தார் சிவபெருமான்.

(7) போகத்தைத் தரும் கருவேளை, புதல்வனுகத் தந்தார் புருடோத்தமர்; யோகத்தைத் தரும் செவ்வேளை, இனிது அருளினர் சிவபிரான். இந்த இரண்டும், உலக இயற்கை யாகும்.

(8) முகுந்தர் ஒரு நாள் மோகினி ஆயினர்; ஞான யோகி உருவில் இணைந்து, அரிகர புத்திரரை அருளினர் சிவபிரான்.

(9) அம்பின் உருவம் ஆயினர் நாரணர்; அதை என்றும் சிவனுர் ஏந்தியுள்ளர்.

(10) கதிர்மிகு சந்திர சூரியரை, கண்களாகக் கொண் டார் நாரணர், அவைகளுடன், கண்ணுதலும் ஆயது சிவஜோதி.

விழிப்பும் கனவும், வினைதுயிலும் பொய்த்து
ஒழிந்தால், துரியநிலை உற்றிடலாம் காணீரே.

(11) அமைதியுள அமயம், சூரிய மண்டலத்தில் சுகித்தார் திருமால்; பாடழிந்த காலத்தில், பருதியின் பல்லைப் பறித்தார் பரமேசர்.

(12) படைப்பாளைப் படைத்தார் பரந்தாமர்: அத் திருமாலைத் தன் ஆகத்தில் இணைத்தார் அமரர் பிரான்.

(13) விஸ்வ ரூபர் ஆயினர் விஷ்ணு மூர்த்தி; விஸ்வ நாதர் ஆயினர் காசியார்.

(14) கேசவர் நாமம் கொண்டார் அச்சுதர்: வியோம கேசவர் ஆயினர் விசாகர் பிதா

(15) கடலில் இருந்து உலகைக் காக்கின்றார் கடல் வண்ணர்; மலைமேல் இருந்து மாநிலம் புரக்கின்றார் மாதேவர்.

(16) கண்டம் கருததவர் காபாலி; காயம் கருத்தவர் கோபாலர்.

(17) தேனுகன் தோலை உரித்தார் திருமால்; தாருவனர் ஏவிய புலியின தோலை உரிததது புனித சிவம்.

(18) அட்ட லட்சுமி மணாளா நாரணர்; அட்ட மூர்த்தர் ஆயினர் சிவபிரான்.

(19) யமுனை நதிக்கு உரியவன் கண்ணன்; கங்கை நதிக்கு உரியவர் கண்ணுதலார்.

(20) பொனமலையை அரைஞாண் ஆக்கினர் புருடோத்தமர்; அம்மலையை வில்லாக வளைததார் சிவபெருமான்.

(21) பூ மகளை ஆகத்தில் வைத்து, பக்தர்கட்குப் பாக்கியம் விளைவிக்கிறார் பரந்தாமர். உத்தம அனபர்கட்கு, பிட்சை எடுத்தும் உதவுகிறார் சிவபிரான்.

(22) இலட்சுமிபதி, தவநிறை கோலர் ஆதலின், மாதவர் எனும் பெயரினர் ஆயினர். பார்வதிபதி, தவவடிவர் எனும் கருததில், அதே பெயரை உடையவர் ஆயினர்.

(தொடரும்)

ஓக்களித்த ஞால உறவை ஒதுக்கி,மதி
நோககளித்த தெய்வநெறி நுட்பமுணர் என்மனனே.

LOVE AND WORSHIP

Love is the highest form of worship. All that man does in love of God, the Lord accepts as man's highest offering. Fear of God also stimulates man to worship of God. But this stimulus has for its basic foundation, a dread of divine punishment which the ego is anxions to avoid. Evil reaction is feared from the absence of worship. The approach of love to God is based on an evident preparedness to sacrifice all things of the world in an effort to have the joy of His union. In fears man seeks to protect himself from the wrath of God. Self-abnegation is behind the worship of love. Self service is behind the worship of fear. In one sense the latter is selfish, whereas the former is selfless.

Hence the power of love is all mighty. The unification brought about by love makes the strength of the beloved God, the strength of the lover. The power of hate is essentially established within the limits of the individuals in terms of their isolated existence.

The great Tamil saints and siddhars were apostles of God love, rather than of God-fear. Where the motive power of human action is God-love, it essentially takes man to a stage

where all evil actions are eschewed, if not conducive to the fruition of love, not that punishment is feared, but that love must attain realisation. *Love goes with cheer, and life becomes a paradise.* Fear inspires despondency and cussedness, and dries up all the springs of inspiration. God lives in his great work—*the humanity.* Love God, and so love man. Meditate on Him and serve mankind. This great principle of worship has been stressed again and again by the Tamil Siddhars and devotees all the ages through.

(5-2) —*Thiruppugal Mani.*

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து 'பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை-1.

கங்கை முடித்தாய்! கறைமிடற்ருய்! கண்ணுதலாய்!
திங்கள் புனைந்தாய்! சிவனே சிவனே (என்று)
இங்கு நின(து) அடியேம் எல்லோங்களும் அரற்ற
நங்கள் உயிர்க்குயிராம் நாயகநீ கேட்டிலையோ?

No.1506
MILD SCENTED
ASOKA

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.

MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பினாயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு

சென்னை-3.

டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து குரோதி வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Tirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by [illegible]